# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 254 | சனி, செப்ரெம்பர் 30, 2023 | 15 பக்கங்கள்




# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க ரணில் திட்டமிடுகின்றாரா?

அகிலன்

## மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு படுகொலையின் 33வது ஆண்டு நினைவு நாள்

ஏரம்பமூர்த்தி கங்காதரன் மூத்த ஊடகவியலாளர்



## தமிழ்த் தலைமைகள் இப்போது முகவர்களாக மாறி விட்டார்கள்

கலாநிதி க.சிதம்பரநாதன் செவ்வி




© 2023 இலக்கு இணையம்

# இந்தியாவுக்கு ஆதரவாக கனடாவுக்கு எதிராக களமிறங்கிய இலங்கை



கனடாவில் உள்ள சீக்கிய ஆலயத்தில் அதன் தலைவரான ஹர்தீப் சிங் நிஜார் என்பவரை இந்தியாவின் புலனாய்வுத்துறை சுட்டுக்கொன்றதாக கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ குற்றம் சுமத்தியதை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் இரஜதந்திர மோதல்களில் இலங்கை இந்தியாவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளது.

கனடாவுக்கு எதிரான இந்தியாவின் வாதம் காத்திரமானதும், உறுதியானதும், இலங்கை இந்த விவகாரத்தில் இந்தியாவின் பக்கமே நிற்கும் என இந்தியாவில் இருந்து தனது தூதரகப்பணிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

அதேசமயம், கனடா பயங்கரவாத்திற்கு ஆதரவளிக்கும் நாடு எனவும், இந்தியாவின் நிலைப்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# இலங்கைக்கு நிதி வழங்குவதற்கு நாணய நிதியம் மறுப்பு

இலங்கை அரசு பொருளாதாரத்தில் உறுதித் தன்மையை நோக்கி நகர்ந்துள்ளதே தவிர அதன் பொருளாதாரம் முன்னைய நிலைக்கு திரும்புவதற்கான சாந்தியங்கள் இல்லை என அனைத்துலக நாணய நிதியம் மேற்கொண்ட முதல் கட்ட ஆய்வில் தொவித்துள்ளதுடன், அதிகாரிகள் மட்டத்திலான உடன்பாட்டை எட்டவும் மறுத்துள்ளது.

இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி இடம்பெற்ற பின்னர்



இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர்களை வழங்குவதாக அனைத்துலக நாணயநிதியம் தெரிவித்திருந்தது. அதற்கு பல நிபந்தனைகளையும் அது விதித்திருந்தது. ஆனால்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# நகொர்னோ - கரபா குடியரசு கலைக்கப்படுவதாக அறிவிப்பு



சோவியத்து ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னர் 1990 ஆம் ஆண்டு ஆர்மேனியாவினால் கைப்பற்றப்பட்டு குடியரசாக அறிவிக்கப்பட்ட ஆர்ஜா பைஜானில் உள்ள என்ற பகுதி மீண் டும் ஆர்ஜாபைஜானுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் உள்ள ஆயுதப்படைகளுக்கு எதிராக கடந்த 19 ஆம் நாள் ஆர்ஜாபைஜான் படையினர் படை நடவடிக்கையை ஆரம்பித்தபோது மோதல்கள் வெடித்திருந்தன. இந்த மோதல்களில் 200 இற்கு மேற் பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

அதனை தொடர்ந்து 20 ஆம் நாள் அங்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதுடன், எதிர் வரும் ஜனவரி 1 ஆம் நாளுடன்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# பங்களாதேசத்தின் கடற்கரைகளில் கைவிடப்படும் அழிவடைந்த கப்பல்கள்

பங்களாதேசத்தின் கடற்கரைகளில் ஐரோப்பிய நாடுகளால் கைவிடப்படும் பாவனைக்கு உதவாத கப்பல்களால் அந்த பகுதி மாசடைந்துவருவதாகவும், மக்கள் கொல்லப்படுவதாகவும் வொசிங்டனை தளமாகக் கொண்ட அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பல கப்பல்களை கடல் போக்குவரத்து நிறுவனங்கள் மிகவும்ஆபத்தானநிலையில்கைவிட்டு வருகின்றன. பங்களாதேசத்தில் கப்பல்களை உடைக்கும் தொழில் பிரபலம்பெற்று வருகின்றது.



ஆனால் சில கப்பல்களினால் அந்த பகுதி நட்சுத்தன்மையானதாக மாறி வருவதுடன், தொழிலில் ஈடுபடுபவர்களும் மரணமடைந்து வருகின்றனர்.

அந்த நாட்டின்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# இந்தியாவில் மீண்டும் இனக்கலவரம் – 80 பேர் காயம்

இந்தியாவின் மணிப்பூரில் மீண்டும் இனக்கலவரம் மூண்டதால் அங்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவான மக்கள் காயமடைந்துள்ளனர்.



கடந்த மே மாதம் அங்கு இடம்பெற்ற வன்முறைகளால் 180 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், 50,000 இற்கு மேற்பட்டவர்கள் இடம் பெயர்ந்திருந்தனர். தற்போது மீண்டும் அங்கு கலவரம் ஏற்பட்டுள்ளது. இரண்டு மாணவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப் பட்டதை தொடர்ந்து இந்த கல வரங்கள் ஏற்பட்டுள்ளது.

32 இலட்சம் மக்கள் தொகையை கொண்ட இந்த மாநிலத்தில் அரைவாசி மக்கள் இந்துத்துவ மெய்ரி இனத்தை சேர்ந்தவர்கள் 40 விகிதமானவர்கள் குகிசோ இனத்தை சேர்ந்தவர்கள், அவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்கள்.

கடந்த ஜுலை மாதம் கடந்தப்பட்ட இரு இந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும், அவர்களின் சடலங்கள் இந்த வாரம் மீட்கப்பட்டதால்இந்தபுதியவன்முறைகள் அங்கு ஏற்பட்டுள்ளது. அங்கு புதன்கிழமை(27) இடம்பெற்ற வன்முறைகளால் 80 இற்கு மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்துள்ளனர். வியாழக்கிழமை(28) முதல் அந்த பகுதியில் காலவரையறையற்ற ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மியான்மாரின் எல்லையில் உள்ள இந்த மாநிலத்தில் ஒரு உள்நாட்டு போர் எற்பட்டு வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். அங்கு வேலைவாய்ப்பு, அரசியல் அதிகாரங்களில் இனங்களுக்கு இடையில் பாகுபாடுகள் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆபிரிக்க நாட்டில் இராணுவப்புரட்சி முறியடிக்கப்பட்டதாக தகவல்

தமது நாட்டில் மேற்கொள்ளப்படவிருந்த இராணுவப் புரட்சியை தமது படையினரும், புலனாய்வுத்துறையினரும் முறியடித்துள்ளதாக பேர்கினோ பசொ நாட்டின் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வருடமே இந்த நாட்டில் படைத்துறை புரட்சி மூலம் இராணுவ அதிகாரி கப்டன் இப்ராஹீம் தாகூர் ஆட்சியை கைப்பற்றியிருந்தார். அங்கு தற்போது மேலும் ஒரு இராணுவப்புரட்சி மேற்கொள்ளவிருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டின் அரச அலுவலகங்கள், படைதளங்கள் மீது தாக்



குதல் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டதை தமது புலனாய்வுத்துறையினர் கடந்த புதன்கிழமை(27) கண்டறிந்ததால் அனர்த்தம் தவிர்ப்பட்டதாகவும், அதற்கு பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் பலரை தேடி வருவதாகவும் அரச அதிகாரிகள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அமெரிக்க வெளிவிவகார அமைச்சகத்தின் மின்னஞ்சல்களை திருடிய சீனா

கடந்த சில மாதங்களில் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சகத்தில்உள்ள கணணிகளுக்குள் ஊடுருவி 60,000க்கு மேற்பட்ட மின்னஞ்சல்களை சீனாவின் சைபர் பிரிவு திருடியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



அமெரிக்காவின் வர்த்தகத்துறை தலைவர், சீனாவுக்கான அமெரிக்க தூதுவர் நிக்கொலஸ் போர்ன்ஸ் ஆகியோரின் கணணிகளே அதிகம் குறிவைக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை(27) மூடிய அறைக்குள் இடம்பெற்ற முக்கிய அதிகாரிகளுக்கான கூட்டத்தில் இந்த தகவல்கள் பேசப்பட்டுள்ளன.

இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான இராஜதந்திர பணிகளில் ஈடுபட்ட 10 இற்கு மேற்பட்டவர்களின் தகவல்களும் திருடப்பட்டுள்ளன என குடியரசுக் கட்சியை சேர்ந்த செனட் சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார். இந்த சைபர் தாக்குதல் சம்பவத்தை மைக்ரோசொப்ட் நிறுவனம் கடந்த ஜுலை மாதம் உறுதிப்படுத்தியிருந்தது. அமெரிக்காவின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தண்டனைகளில் இருந்து இலங்கை தப்பித்து வரும் போக்கிற்கு ஐ.நா முடிவு- கட்ட வேண்டும்

## அன்புமணி

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசால் நிகழ்த்தப்பட்ட மனிதகுலத்திற்கு எதிரான 21-ஆம் நூற்றாண்டின் முதலாவது அட்டூழியம் மற்றும் குற்றங்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அழைப்பை செயல்படுத்த அனைத்து உறுப்பு நாடுகளையும் கேட்டுக் கொள்கிறோம் என ஜெனீவா நகரில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 54-ஆவது அமர்வில் பசுமைத்தாயகம் அமைப்பின் சார்பில் கடந்த வியாழக்கிழமை (27) உரையாற்றும் போது அன்புமணி இராமதாஸ் தெரிவித்திருந்தார்.




இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் இலங்கை பொறுப்புடைமைத் திட்டத்தின் (OHCHR's Sri Lanka Accountability Project-SLAP) திரட்டப்பட்டுள்ள சாட்சியங்களைக் கொண்டு ஈழத்தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும், அதிலிருந்து எந்த தண்டனையும் இல்லாமல் இலங்கை அரசு தப்பித்து வரும் போக்கிற்கும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் உறுப்பு நாடுகள் முடிவு கட்ட வேண்டும்.

இலங்கை அரசின் மீது பல்வேறு வகையான தடைகளை விதித்தல், ஒவ்வொரு நாடும் அதன் சொந்த நீதிமன்றங்களில் சிவில், குற்றவியல் வழக்குகளை தொடருதல், உலகில் இப்போது செயல்பாட்டில் உள்ள பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றங்களுக்கு போர்க்குற்றம் குறித்த வழக்குகளை மாற்றுதல், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி விசாரிக்கும் வகையில் பன்னாட்டு குற்றவியல் நீதி வழங்குவதற்கான பொறிமுறையை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் இதை சாதிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# சிறிலங்காவின் நடவடிக்கைகளில் எதுவித மாற்றமுமில்லை

## கஜேந்திரகுமார்



சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதுவித மாற்றமுமின்றித் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. பதினைந்து வருடங்களாகத் தொடரும் இந் நிலைமையை அங்கத்துவ நாடுகள் உற்று நோக்கினால் சிறிலங்கா அரசினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டிய அவசியம் புலப்படும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனிவாவில் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் வசிக்காத தமிழர் தாயகப்பகுதி

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# ஈழத்தமிழருக்குச் சட்டத்தின் ஆட்சி இல்லாத நிலையில் இறைமையுடன் கூடிய தன்னாட்சியே உயிர் பாதுகாப்புக்கான ஒரே வழி

முல்லைத்தீவு மாவட்ட நீதியரசர் ரீ சரவணராஜா அவர்களைச் சிறிலங்காவின் சட்டமா அதிபர் அழைத்து ஆலோசனை என்ற பெயரில் குருந்தூர்மலை தொடர்பான வழக்கில் அவர் அளித்த தீர்ப்பை மாற்றும்படி வலியுறுத்தி நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடு சட்டமா அதிபராலேயே அனுமதிக்கப்படாதநிலை இலங்கையில் உண்டென்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் யூலை மாதம் 23ம் நாள் சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரா தனது உரையில் மிகமோசமான முறையில் நீதியரசர் ரீ சரவணராஜாவை அவதூறாகப் பேசி பாராளுமன்ற உறுப்பினருக்குள்ள சிறப்புரிமையைப் பயன்படுத்தித் தான் அவதூறு பேசியதற்கான சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து சிங்கள பௌத்த இனமதமொழி வெறியை மக்கள் மத்தியில் தூண்டியுள்ளார். அதே வேளை பாராளுமன்றத்துக்கு நீதித்துறையினைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நிலையை உள்ளாராட்சி தேர்தலுக்கு நிதியை வழங்க வேண்டுமென தீர்ப்பளித்த நீதிபதிகளை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்கப் போவதாக எச்சரித்ததின் மூலம் இன்றைய அரசு வெளிப்படுத்தியது. இதன் மூலம் சனநாயக ஆட்சியில் சட்டவாக்கம் சட்ட அமுலாக்கம் நிர்வாகம் மூன்றும் வெவ்வேறாக இருக்க வேண்டுமென்ற வலுவேறாக்கக் கோட்பாட்டையே மீறி சனநாயக ஆட்சியைச் சர்வாதிகார ஆட்சியாகப் பாராளுமன்ற கொடுங்கோன்மையை வெளிப்படுத்தினர் .இதனை ஊக்குவிக்கும் வகையில் நிறைவேற்று அதிகாரம் உள்ள் சர்வ வல்லமையுள்ள ஜனாதிபதிதான் என்பதை உணர்த்தும் வகையில் ஜனாதிபதியே கடன்மறுசீரமைப்பு தொடர்பான வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பைப் பொருட்படுத்த மாட்டேன் என வெளிப்படையாக அறிவித்து நிர்வாகத்தின் தலையீட்டை நீதித்துறை மேல் வெளிப்படுத்தினார்.

இவற்றுக்கு அப்பால் இலங்கை அரசியலில் அமுக்கக் குழுக்களாக என்றும் உள்ள மகாசங்கப் பௌத்தபிக்குகள் தாங்களே நாட்டின் மீயுயர் இறைமையாளர்கள் என்று மக்களின் இறைமையைக் கையிலெடுத்து சர்வாதிகளாகப் பலவழிகளில் குருந்தூர்மலைத் தீர்ப்பை அளித்தும், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளை அகழ்வாராய்வதைப் பார்வையிட்டு கட்டளைகள் இட்டு நெறிப்படுத்தியும், தியாக தீபம் திலீபனின் நினைவினை முன்னெடுப்பது தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்தும் தனது நீதித்துறைக் கடமையைச் செய்த நீதியரசர் ரீ சரவணராஜா அவர்களுக்கு எச்சரிப்புக்களும் மிரட்டல்களும் செய்துள்ளனர்.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகள் அவர்மேல் போடப்பட்டு அவரின் சுதந்திரமாகத் தீர்ப்பளிக்கும் உரிமை கேள்விக்குள்ளாக்கப்பட்டது இவற்றின் உச்சநிகழ்வாக சிறிலங்காவின் புலனாய்வுத்துறையினர் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் செய்து, இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தியதால் நீதியரசர் ரீ.சரவணராஜா தனது நீதியரசர் பதவியினைத் துறப்பதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம் மூலம் அறிவித்துவிட்டு நாட்டை விட்டு உயிர்ப்பாதுகாப்புக்காக வெளியேறியுள்ளார்.

இந்த வார இறுதியில் நடந்த இந்த நிகழ்வானது ஈழத்தமிழருக்கு சனநாயக ஆட்சியின் ஆணிவேராக உள்ள சட்டத்தின் முன் நாட்டின குடிகள் அனைவரும் சமம் என்பது நீதிபதியரசராக தமிழர் இருந்தாலும் அவருக்கில்லை என்பதையும் சட்ட அமுலாக்கத்தின் மூலம் இனம்காணக்கூடிய அச்சத்தால் நீதியரசரையும் வேறுநாடுகளில் அரசியல் புகலிடம் கோரும் நிலையை உருவாக்குவார்கள் என்பதையும் உலகுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில் கடந்த வாரத்தில் ஈழத்தமிழர்களின் நடமாடும் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் போன்ற அடிப்படை மனிதஉரிமைகளையே மறுத்து தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தியை தாக்கிச் சேதப்படுத்தியும் கூடவே நினைவு ஊர்தியோடு சென்று கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனைக் கைகளாலும் சிறிலங்கா தேசியக் கொடியுடன் பொல்லுகளாலும் தாக்கிச் சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர்கள் தமிழராக இருப்பின் அவரின் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சிறப்புரிமைகளும் மதிக்கப்படாது பொலிசாரின் பாதுகாப்பும் இருக்காது என்பதை உலகுக்கு ஈழத்தமிழர்களுடன் தாம் கூடிவாழ விரும்பவில்லை என்பதைச் சிங்களவர்கள் ஈழத்தமிழர்களின் தலைநகரமாகக் கருதப்படும் திருகோணமலையில் வைத்து நிரூபித்திருந்தார்கள்.

இந்த இரண்டு சமகால வரலாற்று நிகழ்வுகளும் ஈழத்தமிழர்களுக்குச் சட்டத்தின் முன் குடிமக்கள் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் நீதிமன்றத்தின் வழி நீதி பெறும் நீதிச் சமத்துவம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தி அடிப்படை மனித உரிமைகள் ஈழத்தமிழருக்கு அனுமதிக்கப்படாதென்பதையும் மீளவும் உறுதியாக்கியுள்ளன. இதற்கு இவ்வாரத்தில் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படவுள்ள புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத் திருத்தம் சட்டப்பலமளித்து, 1979 முதல் பயங்கரவாதத் தடைச்சட்டம் மூலம் ஈழத்தமிழரை இனவழிப்பு செய்வதை மேலும் வலுப்படுத்தவுள்ளது.

கூடவே சமூக வலைத்தளங்கள் சமூக ஊடகங்கள் வழி ஈழத்தமிழர்கள் உலகிடம் தங்களுக்கு நாளாந்தம் சிறிலங்கா செய்யும் இனங்காணக்கூடிய அச்சத்தை வெளிப்படுத்துவதைத் தடுக்க ஊடகங்களையும் மக்களையும் மௌனிக்கச் செய்யும் நிகழ்நிலைக்ககாப்பு ஆணைக்குழவை நிறுவும் நிகழ்நிலைக்காப்பு ஆணைக்குழச் சட்டமும் பாராளுமன்றத்தில் சட்டமாகிறது. இவற்றின் துணையுடன் மீண்டும் ஒரு ஈழத்தமிழின அழிப்பை மதவெறிமூலம் தொடக்கி அனைத்துலக நாணய நிதியம் 2வது தவணைப் பணத்தை வழங்காது அல்லது மிகக்குறைத்து வழங்குவதால் ஏற்படப்போகும் பட்டினிநிலையால் சிங்களவர்கள் கிளர்ந்தெழுவதைத் திசைமாற்றச் சிறிலங்கா அரசாங்கம் பலமாக முயன்று வருகிறது.

இவற்றில் இருந்து ஈழத்தமிழர்களைக் காக்க ஈழத்தமிழ் மக்களின் இறைமையுடன் கூடிய தன்னாட்சியே அவர்களுடைய உயிரையும் உடைமைகளையும் நாளந்த வாழ்வையும் பாதுகாப்பதற்கான ஒரேவழி என்பதை உலகநாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் மீண்டும் தெட்டத்தெளிவாக்குகின்றன. எனவே உலகநாடுகளும் ஐக்கியநாடுகள் சபையும் அனைத்துலக சட்டங்களுக்கு அமைவாக ஈழத்தமிழர்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்களுடைய அரசியல் எதிர்காலத்தை அவர்களே நிர்ணயிக்கும் பிரிக்கப்பட முடியாத அவர்களின் மனிதஉரிமையினை மதித்து அவர்களுக்கான தன்னாட்சியை அவர்கள் பெற்று வாழ அனைத்துலகச் சட்டங்கள் நெறிப்படுத்தும் செயற்பாடுகளை உடனே தொடங்க உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் செயற்பட வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார அழைப்பாக உள்ளது. வெறும் கண்டனங்களும் திறனாய்வுகளும் செய்து காலத்தை வீணடிக்காது ஐக்கியநாடுகள் சபையையும் உலகநாடுகளையும் அவற்றின் அனைத்துலகச் சட்டக் கடமைகளைச் செய்யுமாறு ஊக்குவிக்கும் செயற்திட்டங்களை தாயகத்திலும் புலத்திலும் கூடித்திட்டமிடல், வேலைகளைப் பிரித்துச் செய்தல், இளையவர்களை அவர்கள் பாணியில் பங்கேற்க அனுமதித்தல் வசைபாடுவதை விடுத்து இசைவுள்ள சமுதாயமாகத் தேசமாக எழும் சத்தியை ஈழத்தமிழரிடை தோற்றுவித்தல் ஈழத்தமிழரின் மதிவளத்தையும் நிதிவளத்தையும் சமூக அறிவுப் பலமாகவும் சமூக முதலீடாகவும் மாற்றல் வழி முன்னெடுக்க முயற்சிப்பதே இன்றைய சவால்களை எதிர்கொள்ள ஒரேவழி என்பது இலக்கின் பலமான கருத்து.

அதே நேரத்தில் யேர்மனில் கடந்தவாரம் 28 29ம் திகதிகளில் நடந்த உலகமயமாக்கலை எவ்வாறு எதிர்கொள்ளுதல் என்ற அரசத்தலைவர்கள் மாநாட்டில் உலக வங்கிக்கும் யு எஸ் எய்ட் சமந்தாபவர் அவர்களுக்கும் நாட்டை வங்குரோத்து நிலையில் நின்று மீட்டு விட்டதற்கு நன்றி கூறி இந்தியாவைப் புறக்கணித்துச் சீனாவுக்கு மகிழ்வூட்டிய ரணில் இந்தியா சீனா அமெரிக்காவின் தலையீடுகள் இலங்கையின் தீர்மானமெடுக்கும் உரிமையைப் பாதித்த நிலையில் தாம் வாழப்பழகிவிட்டதாக ஐரோப்பியரை மகிழ்விக்கப் பேசி சிறிலங்கா இறைமையை இழந்துவிட்ட உண்மையையும் வெளிப்படுத்தியுள்ளார். சிங்கள ஆட்சியாளர்கள் அரைநூற்றாண்டுக்கும் மேலாகத் தாங்கள் ஈழத்தமிழர்கள் மீதான இனஅழிப்புக்காக பிறநாடுகளில் போர் நடத்தப்பட்ட படுகடன்களைக்கட்ட இயலாத நிலையில் இறைமையை இழந்துள்ள சிறிலங்கா ஜனாதிபதி போகுமிடத்துக்கு ஏற்ப பிறநாடுகளில் பழிபோடுகிறார். இம்மாதம் சீனாவுக்குப் போய் அங்கு சீனாவே எல்லாம் என்பார். இந்நிலையில் சிங்களவர்களின் இறைமைக்குள் அடங்காத ஈழத்தமிழர்களின் இறைமையை ஏற்றும் முஸ்லீம் மலையக மக்களின் குடித்துவத்தை மதித்து அவர்களின் அரசியல் உரிமைகளை வழங்கியுமே இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுபப்லாம் என்ற உண்மையை உலகுக்கு உலகத் தமிழர்கள் எடுத்துரைக்க வேண்டிய நேரமிது.

**ஆசிரியர்**

# தாயகத்திலும், அனைத்துலக நாடுகளிலும் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டார் தியாக தீபம் திலீபன்

தியாக தீபம் திலீபனின் 36 வது நினைவு நாளையொட்டி தமிழர் தாயகத்திலும் உலக நாடுகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இந்த வாரம் இடம்பெற்றன.

தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்திற்கு வலுச்சேர்க்க அகிம்சை வழியில் போராடி தனது உயிரை துறந்த நல்லூர் மண்ணில் மாணவர்களும், பொதுமக்களும், அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் என பெருமளவான மக்கள் ஒன்றுகூடியது திலீபனின் மக்கள் புரட்சி உருவாகவேணும் என்ற நோக்கத்திற்கு வலுச்சேர்ப்பதாகவே இருந்தது.

கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து உட்பட பெருமளவான ஐரோப்பிய நாடுகளிலும் திலீபனின் நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டது.

பல நாடுகளில் தமிழீழ தேசிய கீதத்துடன் ஈகைச்சுடரேற்றி ஆரம்பமான நிகழ்வுளில், அகவணக்கத்தை தொடந்து தமிழ் உறவுகள் அனைவரும் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.


பல நாடுகளில் இளைய சமுதாயத்தை சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும், சிறுவர்களும் பங்கெடுத்ததுடன், சில நாடுகளில் தீபம் தீலீபனின் உருவப்பட ஓவியக் கீறல்கள் போட்டி போன்ற நிகழ்வுகளும் நடத்தப்பட்டிருந்தன.




















# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க ரணில் திட்டமிடுகின்றாரா?

அகிலன்

“ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க திட்டமிடுகின்றார்” எனக் கசிந்திருக்கும் செய்திகள் எதிர்க் கட்சிகளை விழித்தெழ வைத்துள்ளன. தேர்தல் நடத்தப்பட்டேயாகவேண்டும் என்று எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொருவரும் அறிக்கைகளை வெளியிடத் தொடங்கியுள்ளார்கள். இவ் விடயத்தில் ரணிலின் உபாயம்தான் என்ன?

நவம்பர் முதல் வாரத்தில் அடுத்த வருடத்துக்கான பட்ஜட் பாராளுமன்றத்துக்கு வருகின்றது. “இதில் தேர்தலுக்கான ஒதுக்கீட்டை மேற்கொண்டால், கடந்த வருடம் போல எரிபொருள் பிரச்சினை உட்பட பல நெருக்கடிகள் ஏற்படலாம்” என்ற எச்சரிக்கை ஒன்றை வஜிர அபேவர்த்தன விடுத்திருந்தார். அதனைத் தொடர்ந்தே தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்ற கருத்துக்கள் பரவத் தொடங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் மிக்கவரும் அக்கட்சியின் ஒரே பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர சொன்னதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஜனாதிபதி ரணிலின் குரலாகத்தான் அவரது கருத்தைப் பார்க்க வேண்டும். அதனால்தான், அவரது கருத்து அரசியலில் சூட்டைக் கிளப்பியுள்ளது. ஆனால், இந்த கருத்து வேகமாகப் பரவுவதற்கு அது மட்டும் காரணமல்ல.

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தி, மீண்டும் ஒரு முறை நிறைவேற்று அதிகாரத்தைத் தக்கவைக்க ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பார் என்ற கருத்து கடந்த சில மாதங்களாக இருந்தது. ஆனால், இப்போது ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அவர் முற்படலாம் எனத் தகவல்கள் கசிந்துள்ளன. இந்த நிலைமைக்கு என்னதான் காரணம்?

அரசியலமைப்பின்படி 2024 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். கடந்த வரும் நாட்டு மக்கள் அனைவரையுமே புரட்டிப் போட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் என்ற பெருமையுடன் முற்கூட்டியே தேர்தலுக்குச் செல்வதற்கான திட்டம் ஒன்று ரணிலிடம் முன்னர் இருந்தது. ஆனால், அந்த நிலைமை இப்போது இல்லாமல் போய் தேர்தலை ஒத்திவைக்க என்ன வழியுள்ளது என்று தேடும் நிலைக்கு ரணில் வந்திருக்கின்றார். இதற்கு சில காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, அவர் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் பரவலான பொதுமக்களின் அதிருப்தி உட்பட பல சவால்களை எதிர்கொள்கிறார். ஐ.எம்.எப். வழங்க வேண்டிய இரண்டாவது தவணைக் கொடுப்பனவு செப்டம்பர் மாத இறுதிக்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த வாரம் கொழும்பு வந்த ஐ.எம்.எப். குழு கைகளை விரித்துவிட்டு நாடு திரும்பிவிட்டார்கள்.



“இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் எப்போது வழங்கப்படும் என உறுதியாகத் தெரிவிக்க முடியாது. ஏனெனில் இலங்கை விதிக்கப்பட்ட இலக்குகளின் நோக்கங்களை நிறைவேற்றத் தவறியுள்ளது. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் காலதாமதமாகலாம்” என அரசியல் தலைவர்கள், மத்திய வங்கி அதிகாரிகளை சந்தித்த ஐ.எம்.எப். பிரதிநிதிகள் உறுதியாகத் தெரிவித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். இதனால், பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையலாம் என பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றார்கள். இதனை ரணில் தரப்பு எதிர்பார்த்திருக்கலாம். அதனைவிட ரணில் மீதான மக்கள் ஆதரவு குறைந்து வருகின்றது என சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

2025-க்குள் நாட்டின் நிலைமை மேம்படும் என்று ரணில் நம்புகிறார், அது அவருக்கு மீண்டும் தேர்தலில் வெற்றிபெற சிறந்த வாய்ப்பைக் கொடுக்கும் என்பது அவரது கணக்கு. அதாவது, ஒரு வருடத்துக்கு தேர்தலை தள்ளிப்போடுவதுதான் அவரது திட்டம் எனச் சொல்லப்படுகின்றது. நியமனப் பத்திரம் பெறப்பட்ட பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்திவைத்த அனுபவம் அவருக்குள்ளது.

உள்நாட்டு அரசியலில் “மெகா கூட்டணி” ஒன்றை அமைப்பதற்கான அவரது முயற்சி எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. குறிப்பாக சஜித் தரப்பை உடைத்து சுமார் 30 எம்.பி.க்களையாவது தனது பக்கத்துக்கு இழுக்க அவர் முயன்றார். அது சாத்தியமாகவில்லை. மறுபுறம் மொட்டு அணியும் தமது தரப்பில் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க வேண்டும் என்பதில் தற்போது உறுதியாகவுள்ளது. இதற்கு மேலாக அண்டை நாடும் சஜித்தை ஆதரிக்கலாம் என்ற தகவலும் உள்ளது. அண்டை நாடு சொல்வதைத்தான் சிறுபான்மையினக் கட்சிகள் செயற்படுத்தும் என்பதும் ரணிலுக்குத் தெரியும்.

இவைதான், ரணிலைக் குழப்பும் விடயங்கள். கடந்த வருடம் ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்த போது டளஸ் அழகப்பெருமாவை ஆதரிப்பது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவுக்கு பின்னால், அண்டை நாடு இருந்தது என்பது இரகசியமல்ல. இப்போதும் அதேநிலைப்பாட்டில்தான் அந்த நாடு இருப்பதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன.

தேர்தலை ஒத்திவைக்க ரணிலுக்கு பல வழிகள் உள்ளன. அவர் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தலாம். அதன் பின்னர் அவர் தனது பதவிக் காலத்தை நீட்டிக்க அரசியலமைப்பை திருத்தவும் முயற்சி செய்யலாம். பொருளாதார நெருக்கடியை இன்னும் கொஞ்சம் மோசமாக்கி அதனை காரணமாக காட்டி தேர்தலை ஒத்திவைப்பதற்கான நகர்வுகளை அவர் முன்னெடுக்கலாம். அதாவது தேர்தலுக்கு நிதி இல்லை என்று சொல்லலாம்.




எவ்வாறாயினும், தேர்தலை ஒத்திவைப்பதற்கும் பல தடைகளும் உள்ளன. முதலாவதாக, அரசியலமைப்பை திருத்துவதற்கு அல்லது அவசர நிலையை பிரகடனப்படுத்த அவருக்கு பாராளுமன்றத்தின் ஆதரவு அவசியம். அது அவருக்கு இல்லை. இரண்டாவதாக, பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக குழுக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பை சந்திக்க நேரிடும். மூன்றாவதாக, தேர்தலை ஒத்திவைப்பது நாட்டை மேலும் சீர்குலைக்கும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதை மிகவும் கடினமாக்கலாம்.

தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஆதரவாக பல வாதங்கள் உள்ளன. முதலாவதாக, பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் அவரது செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு - அல்லது தொடர்வதற்கு அது ரணிலுக்கு கூடுதல் கால அவகாசத்தை வழங்கும். இரண்டாவதாக,

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# நீதி செத்த நாடு

## துரைராசா ஜெயராஜா

“..இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார் என்பது அறியக்கூடியதாக உள்ளது. அவரது புகைப்படம் மற்றும் வர்ணக்கொடிகளைக் கொண்ட வாகனம் பேரணியாகச் செல்வதால் பொதுமக்களின் நல்லிணக்கத்திற்கு எவ்வாறு இடையூறு ஏற்படுகின்றது என்பதனை பொலிஸார் மன்றில் விளக்கமளிக்கத் தவறியுள்ளனர். மரணமடைந்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவரை நினைவுகூறுவதென்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உரிமையாகும். அதனைத் தடுப்பது ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு எதிரானதாகும். உண்மையில் இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தமிழ் மக்களின் உள்ளங்களில் ஒரு தியாக தீபமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவரை நினைவு கூறுவதை தடை செய்வதாலேயே பொதுமக்களின் மத்தியில் அமைதியின்மை ஏற்படும் என மன்று கருதுகின்றது..”






மேற்குறித்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்ப்பை வழங்கியவரே முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் சரவணராஜா அவர்கள். நியாயத்தின் பக்கம் நின்று இத்தீர்ப்பை வழங்கிய மூன்றாம் நாள் அவர் மிகவும் நேசித்த நீதிபதி பதவியை விட்டு நீங்க வேண்டியிருந்தது.



அதற்கான காரணத்தைப் பின்வறுமாறு நீதவான் ஊடாகங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றார்.

”குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரமற்றும்பெரும்பான்மை இனத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளு மன்றத்திலும், நாடாளு மன்றத்திற்குவெளியிலும்எனக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தனர். அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதே வேளை புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னை கண்காணித்துவந்தனர். சட்டமா அதிபர் (சஞ்சய் இராசரத்தினம்), என்னை (முல்லைத்தீவு நீதிபதியை) தனது அலுவலகத்தில் (21.09.2023) ஆம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர் மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார். குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு (முல்லைத்தீவு நீதிபதிக்கு) எதிராக மேன் முறையீடு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குள் கோப்பிடப் பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத் தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.”


Judge Chamber No. 021-2290010
Registrar No. 021-2290000
Fax No. 021-2290000
My No. DC/MC/MUL/2023
Your No.
Date
DISTRICT /MAGISTRATE'S COURT, MULLAITIVU.

23.09.2023

Hon. Secretary,
Judicial Services Commission,
Colombo 12.

RESIGNATION LETTER

I hereby inform you that I resign my post of District Judge, post of magistrate, post of family court Judge, post of primary court Judge, post of small claims court Judge, post of Juvenile court Judge due to threat of my life and due to lot of stress.

Please accept my resignation.

Thank you.

T.Saravanarajah
District Judge & Magistrate
District & Magistrate's Court
Mullaitivu.

### இவை மட்டுமா காரணங்கள்

நீதவான் அவர்களின் பதவி துறப்பிற்கு அவர் குறிப்பிட்டவைகள் உடனடிக்காரணங்களாக இருக்கின்ற போதிலும், அவரை வலிந்து அகற்ற வேண்டிய தேவை பௌத்த மேலாதிக்கவாத சிறிலங்கா அரசுக்கு இருந்தது. அதில் முதன்மையானது கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விடயம். கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயம் வெளிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து அந்த விடயத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் அவர்களின் பங்களிப்பு இருந்தது. தள்ளிப்போட வாய்ப்பிருந்த அகழ்வுப் பணிகளை துரிதப்படுத்தியமை, அதற்கான குழுவை நியமித்தமை, அகழ்வுப் பணிகளை நேரடியாக சென்று அவதானித்துக்கொண்டிருந்தமை என பல நடவடிக்கைகளைத் தன் பதவிக்கு அப்பால் சென்று செய்திருந்தார். எனவே அகழ்வு இடம்பெற்ற 09 நாட்களிலும், நீதிபதியின் கண்ணில் மண்ணைத்தூவிவிட்டு எந்த ஒளிவுமறைவுகளையும் அரசினால் செய்ய முடியவில்லை. உடனுக்குடன் உண்மைகளை வெளிப்படுத்த வேண்டிய இக்கட்டு நிலையில் அரசு இருந்தது. அகழ்வின் தற்காலிக முடிவில்கூட அகழ்வின் அறிக்கையை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கே சமர்ப்பிக்கவேண்டியிருக்கிறது. இறுதிப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த அல்லது கையளிக்கப்பட்டவர்களே படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் என்பதை தெட்டத்தெளிவாக உணர்த்தும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி குறித்த உண்மை ஒரு நீதிமன்றின் ஊடாக வெளிவருவது சிறீலங்கா அரசிற்கு பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும்.





சிறீலங்கா அரசபடைகள் மேற்கொண்ட இனப்படுகொலை அம்பலப்படும். எனவே தான் அதில் ஒரு முடிவெடுக்கும் முன்பே நீதவான் அவர்கள் அப்பதவியிலிருந்து உயிரச்சுறுத்தல் கொடுக்கப்பட்டு துரத்தப்பட்டுள்ளார்.

அவர் தனக்கு அழுத்தம் பிரயோகித்த நபர்களின் முக்கியமானவராக குறிப்பிடும் தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் இராசரத்தினம், சிறீலங்காவின் நீதித்துறையில் முதன்மைப் பதவியில் இருப்பவர். இம்முறை இடம்பெற்ற தியாகதீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலின்று இறுதிநாள் நிகழ்வை நிறுத்த தனது முழுப்பலத்தையும் பயன்படுத்தியவர். கொழும்பிலிருந்து தனி உலங்குவானூர்தியில் சட்டமா அதிபர் அலுவலக அதிகாரிகளை அனுப்பி “அலுவல்“ பார்த்தவர். அந்தளவுக்கு ”சிறீலங்காவின் நீதித்துறை கட்டமைப்பின்” மீது விசுவாசம் கொண்ட சட்டமாஅதிபர் முல்லைத்தீவு நீதவானை அழைத்து குருந்தூர்மலை தீர்ப்பு விடயத்தில் அழுத்தம் பிரயோகித்தார் என்பதெல்லாம் முழுமையாக ஏற்கக்கூடிய விடயங்கள்தான். ஒரு நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும். அப்போதுதான் அரச அழுத்தங்களுக்கு அடிபணியாது நீதித்துறை மட்டுமாவது இயங்க முடியும். மக்களுக்கு நீதித்துறை மீது நம்பிக்கை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# தமிழ்த் தலைமைகள் இப்போது முகவர்களாக மாறி விட்டார்கள்

## கலாநிதி க.சிதம்பரநாதன் செவ்வி

**தியாகதீபம் திலீபனின் இறுதி நாள் நினைவேந்தலில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் பெருந்தொகையான மக்கள் பங்கேற்றதன் மூலமாக முக்கியமான செய்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மக்களைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கையும் இதன் மூலமாக உணர்த்தப்பட்டிருக்கின்றது. இவை தொடர்பாக சமூக செயற்பாட்டாளரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைத்துறைத் தலைவரும், பண்பாட்டு மையத்தின் இயக்குனருமான கலாநிதி க.சிதம்பரநாதன் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்கள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

**தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு கொட்டும் மழைக்கு மத்தியிலும் பெருந்தொகையான மக்களின் பங்கேற்புடன் நல்லூரில் நடைபெற்றது. இதன் மூலமாக உணா்த்தப்பட்டுள்ள செய்தி என்ன?**

இது மக்கள் அவ்வாறு பங்குபற்றி இருப்பதானது மக்களுடைய உடல் மொழி எதை கூறுகிறது என்றால் அவர்கள் இதை வேட்கையோடு செய்கிறார்கள் ஆழ் மனதோடு செய்கிறார்கள் ஏன் என்றால் தமிழர்களது போராட்டம் என்பது அவர்கள் மனதில் ஆழமாக பதிந்ததொரு விசயம் அந்த போராட்டத்தை நேசித்தார்கள், வேட்கை கொண்டார்கள், அந்த நாட்களில் தமது வீரர்களை முன்மாதிரியாக கொண்டார்கள் உண்மையில் எண் பதுகளில் அந்த வீரர்களை காண்பதில் எல்லாம் ஆர்வம் காட்டினார்கள் இளைஞர்கள் கூட அவர்கள் போவதை தேடி காண முனைவது அவர்களின் பெயர்களை சொல்ல விளைவது அவர்கள் அதனை ஒரு ஆசையோடு செய்தார்கள் இது ஒரு புறம்.

மறுபுறம் என்னவென்றால் சிங்கள பேரினவாத ஒடுக்குமுறை என்பது நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது அதன் காரணமாக அவர்கள் ஆழ்மனதில் தமிழ் மீது பற்று, இனம் மீது பற்றி அவைகள் எல்லாம் நீண்ட காலமாக ஊறிக் கிடக்கின்ற விசயம் இதற்கு அப்பால் மற்றுமோர் விஷயம் என்னவென்றால் தமிழ் இனம் என்பது நீண்ட பாரம்பரிய இனம் அதன் வேர்கள் நீண்ட ஆழத்திற்கு செல்கின்றன தற்போது கீழடி ஆய்வுகள் எல்லாம் வந்ததற்கு பிறகு இன்னும் இன்னும் பின்நோக்கி பாரம்பரிய ஒரு இனம் இது பண்டையர் காலத்திலே தமது வீரர்களுக்கு வழிபாடு செய்து வீரர்களை நடு கல்லாக நட்டு வழிபாடு செலுத்திய ஒரு இனம்.

அது இன்னும் மரபணுக்களில் ஊறி கிடக்கின்றது எனவே இதனால்தான் 2009 இன் பின்பு அந்த நினைவுகளை அழிப்பதை சிங்களப் பேரினவாதம் ஒரு முக்கிய நிகழ்வாக செய்து வருகின்றது அது மட்டும் அல்ல சிங்கள பேரினவாதமும் சரி தமிழ் எழுச்சியை அழிக்க முற்பட்ட ஏனைய ஆளும் வர்க்கங்களும் சரி இந்த மக்களை அந்த நிகழ்வுகளில் இருந்து அகற்றுவதற்காகவே இந்த தமிழ் தலைவர்கள் என்ற பெயரில் இந்த சம்பந்தன் போன்றவர்களை கொண்டு வந்து தமிழ் மக்கள் அந்த அரசியல் ஞாபகங்களை இல்லாமல் தமிழ் மக்கள் ஒரு நுகர்வு கலாச்சாரத்தில் தள்ளப்படுவதக்கான ஒரு நிலமையை உருவாக்கினார்கள் .

என்றாலும் அந்த விசயங்கள் மேல் மனதில் இருந்தால் ஆழ் மனதில் இந்த தமிழ் உணர்வு இருக்கின்றது அதுதான் மீண்டும் மீண்டும் இந்த நாட்களின் போது மீண்டும் எழுந்து வெளியே வருகிறது என்பதைத் தான் இந்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலில் இன்றும் காணுகின்றோம்.

**திலீபனுடைய நினைவுகள் எமது அடுத்த சந்ததிக்கு கடத்தப்பட வேண்டும் எனச் சொல்லப்படுகின்றது. இதன் அவசியம் என்ன?**

வரலாறை அறியவேண்டும் இன்று பிறந்த குழந்தைக்கு கூட அவர்களின் மரபணுக்களில் இந்த விடயங்கள் இருக்கின்றது. தமிழ் உணர்வு இருக்கின்றது எனவே இந்த நடந்த இந்த விடயங்களைக் கூறுகின்ற பொழுது அவர்கள் மிக ஆழமாக ஈடுபடுகின்றனர். இப்படி நடந்ததா? இவ்வாறு எமது வீரர்கள் செயற்பட்டார்களா? என்பதை மிக ஆவலாக அவர்கள் கேட்கின்றார்கள். அதைச் சொல்லுகின்ற திறமை எமது கற்றறிந்த சமூகத்திடம் இல்லை.

எமது கல்வி என்பது இந்த கற்றறிந்த சமூகம் என்பது கல்வியின் ஊடாக ஆக்க சக்தியை இழந்து விட்டது அதிலிருந்த ஆக்கச்சக்தி பிடுங்கி எறியப்பட்டுள்ளது எனவே அவர்கள் ஒரு நுகர்வு தன்மைக்குத்தான் மாற்றப்படுகிறார்கள் .

ஏன் என்றால் புலம்பெயர் இளைஞர்களை சந்திக்கும் போது இதனை எடுத்து கூறுகிறார்கள் அவர்கள் தங்கள் பெற்றோர்கள் இப்படியான வரலாறுகளை எடுத்து கூறும் அளவுக்கு ஆற்றல் போதாது என்று எடுத்து கூறி னார்கள் இவ்வாறான நினைவுகளை எடுத்து கூறுவது கலை நிகழ்வுகளை எல்லாம் நடத்துவது ஒரு முக்கியமான விடையம் .

**நினைவேந்தல் நிகழ்வுகளை அரசியல் மயப்படுத்தாமல் பொதுக் கட்டமைப்புக்களை உருவாக்குவதன் மூலமாக நடத்துவது அவசியம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுவருகின்றது. இது சாத்தியமற்றதாக இருப்பதற்கு என்ன காரணம்?**

நினைவேந்தல் என்பதே ஒரு அரசியல்தான் ஏன் என்றால் ஒரு சமூக அரசியல், பொருளாதார இராணுவ போராட்ட நினைவுகளை த்தான் நாங்கள் நினைவுகளாக மீட்கின்றோம் எனவே அது அரசியல்தான் ஆனால் இங்கு நடப்பது என்னவென்றால் இதிலுள்ள கட்சி அரசியல் தலையீடு. பொது அமைப்பினை கூட ஒருகட்சி நோக்கோடு தான் அவர் உருவாக்குகிறார்கள்.

உண்மையான ஒரு நேர்மையான ஒரு மக்கள் இயக்கத்தில் இருந்து பொது கட்டமைப்பு வருகின்ற போதுதான் அது பெருமளவு மக்களை பற்றி கொள்கின்ற விடையமாக வரும் இவை எல்லாம் 2009 பிறகு கட்சி அரசியலுக்குள் கொண்டு வந்து முடக்கி வைத்து உள்ளதால் உண்மையில் கட்சி அரசியல் என்றால் வியாபாரம்தான் ஒவ்வொரு கட்சியும் தமது வியாபாரத்தை பார்க்குமே தவிர வியாபாரத்திற்கு வேண்டும் என்றால் தமிழ் போராட்டத்தை பயன் படுத்துமே தவிர தமிழ் உணர்வை பயன்படுத்துமே தவிர வேறு இல்லை.

இந்த கட்சி அரசியல் வாதிகள் செய்வது என்ன? தங்களுடைய வியாபாரத்தை பார்த்துக் கொண்டு பாராளுமன்றில் தங்களது அனல் தெறிக்கும் வீரப்பேச்சை பேசுவார்கள் அதனை தங்களது கட்சி தொண்டர்கள் இணையத் தளங்களில் ஐயா பாராளுமன்றத்தில் முழங்கினார் என்று பதிவேற்றங்கள் செய்து கொண்டு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கவேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உள்ளது

இலங்கையின் சட்டத்துறையானது இரண்டு வகையில் செயற்படுகின்றது என்பது இன்று நேற்றல்ல பல ஆண்டுகாலமாக அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கையினைப்பொறுத்த வரைக்கும் இங்கு தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமே காணப்படுகின்றது. அதனை தமிழர்களும் கோருகின்றனர். சிங்களவர்களினால் தமிழர்களுக்கு எந்தவிதமான நீதியையும் தரமுடியாது.

அதனால் தமிழர்கள் தங்களை தாங்களே ஆளும் நிலைமையினை ஏற்படுத்தும்போது தமிழர்களுக்கான நீதியை தமிழர்கள் எழுதிக்கொள்வார்கள்.



இன்று வடகிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமையென்பதை சர்வதேச சமூகம் வெறுமனே இலங்கைக்கு ஆலோசனை கூறுவதுடன் மட்டும் கடந்துசெல்லப்போகின்றதா என்பது கேள்வியாகவே இருக்கின்றது. இந்த நாட்டில் தமிழர்களுக்கு நீதித்துறையும் சுதந்திரமாக இயங்க முடியாத நிலையும் ஊடகத்துறையும் சுதந்திரமாக செயற்படமுடியாத நிலைமையுமே தொடர்ந்து இருந்துவருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் தமிழர்கள் அடுத்தகட்டமாக என்ன செய்யப்போகின்றார்கள் என்ற கேள்வி இங்கு எழுந்துநிற்கின்றது. கிழக்கினைப்பொறுத்த வரையில் இன்று நீதித்துறையானது தமிழர்களுக்கு எதிரான ஒரு நீதித் துறையாகவேயிருந்துவருகின்றது. இவ்வாறான நிலையில் எதிர்வரும் காலங்களில் தமிழர்களின் பகுதிகளில் பல்வேறு வகையான அத்துமீறிய செயற்பாடுகள் முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.



குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் தலைநகராகயிருந்ததுடன் ஏனைய மாவட்டங்களான அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம் ஆகியவையுமிருந்தன. இதில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் முக்கிய பகுதியாக கல்முனையும் மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய பகுதியாக மட்டக் களப்பும் இருந்தது. இப்பகுதிகளிலேயே அதிகளவு தமிழர்கள் வாழ்ந்தனர். இன்று கிழக்கின் தலைநகராக திருகோணமலை இல்லாமல் சென்று கொண்டிருக்கும் அதேநேரம் அம்பாறையின் தமிழரின் முக்கிய பகுதியாக கல்முனையும் இல்லாமல்போய்விட்டது. எஞ்சியிருப்பது மட்டக்களப்பு நகர் மட்டுமேயாகும்.

இன்று திருகோணமலையில் நினைவேந்தல் செய்யமுடியாத நிலைமை. தமிழர்களின் வாழ்விடங்களில் விகாரைகள் கட்டப் படும் நிலைமை, தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் பௌத்த தொல்பொருளாக அடையாளப் படுத்தப்படும் நிலைமை என திருகோணமலை நகர் உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளை சிங்கள பௌத்த இடமாக மாற்றும் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

திருகோணமலையில் முன்னெடுக்கப்படும் இந்த அத்துமீறிய செயற்பாடுகளுக்கு ஆபத்துகள் வந்துவிடும் என்பதற்காகவே திருகோணமலையில் முன்னெடுக்கப்படும் தமிழர்கள் சார்ந்து போராட்டங்களைதடுத்து நிறுத்தும் செயற்பாடுகள் பல வழிகளில் முன்னெடுக்கப்படுகின்றன. அண்மையில் திருகோணமலை நகரில் நடைபெற்றதியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுக்கு பொலிஸார் நீதிமன்றம் ஊடாக முன்னெடுத்த தடை அத்துடன் திலீபனின் நினைவு ஊர்தி செல்லும்போது அதனை இடைமறித்த சிங்கள காடையர்கள் அதன்மீது மேற்கொண்ட தாக்குதல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.



இவ்வாறான நிலையில் தமிழர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் இனமுறுகல் நிலையினை ஏற்படுத்தும் என அண்மையில் ஊடகங்களுக்கு பேட்டியளித்த கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் தெரிவித்திருக்கின்றார்.

அவரும் சிங்கள பௌத்த கடும்போக்கு வாதிகளை திருப்திப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளையே முன்னெடுப்பதாக இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ் வார இதழ் ஒன்று கடுமையாக சாடியுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநர் கவனத்திற்கு...என்ற கோரிக்கையுடன் அதன் ஆசிரியர் தலையங்கத்தில் கிழக்கு மாகாண ஆளுனருக்கு பல்வேறு சாட்டையடி கொடுக்கப் பட்டுள்ளது.

"திருகோணமலைநிலாவெளிபெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருக்கும் பௌத்த விகாரையின் நிர்மாணப்பணிகளால் இனமுறுகல்கள் ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மற்றும் சமூக ஆர்வலர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடைய கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து நிர்மாணிக்க இருக்கும் விகாரையின் பணிகள் ஆளுநரின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டன.

நிலாவெளி பெரியகுளம் பகுதியில் வசிக்கும் குடும்பங்களில் 500 இற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களும் 02 சிங்கள குடும்பங்களும் வசித்து வருகின்றன. அங்கு வாழும் தமிழ் மக்கள் இவ்விகாரை நிர்மாண பணிகள் ஆரம்பிக்க இருப்பதை நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

**மட்டு.நகரான்**

இந்நிலையில் விகாரை நிர்மாணப்பணி தொடருமாக இருந்தால் இப்பிரதேசத்தில் பாரிய தோர் இனமுறுகல் ஏற்படும் என்று அதனை நிறுத்த ஆளுநர் உத்தரவிட்டாரே? அந்த உத்தரவுக்கு என்ன ஆனது?



ஆளுநரின் தடையுத்தரவை மீறி திருகோணமலை பெரியகுளம் சந்தியில் பௌத்த கொடிகள்நடப்பட்டு சட்டவிரோத விகாரை கட்டுமானம் பொலிஸாரின் பாதுகாப்புடன் கடந்த 9ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதே? பொலிஸார் ஆளுநரின் உத்தரவை மதித் தார்களா? அல்லது சட்டவிரோதமாக கட்டப்படும் விகாரைக்கு முன்கூட்டியேசட்டப்படிஅனுமதிபெறப்பட்டதா? அப்படியான அனுமதி பெறப்படாமல் சட்ட விரோதமாக மேற்கொள்ளப்பட்ட அந்த விகாரை நிர்மாணம் குறித்து நன்கறிந்த ஆளுநர் அப்படியான நிர்மாணம் சமூகங்களிடையே நல்லிணக்கத்தை குலைக்கும் என்று கருதியல்லவா அதனை நிறுத்தக் கோரியுள்ளார்?

திலீபன் நினைவுப்பேரணி அதனைவிடவா நல்லிணக்கத்தை சீர்குலைக்கப்போகிறது ? கிழக்கு மாகாண ஆளுநருக்கு தமிழர் போராட்டமும் வரலாறும் தெரியாமல் இருக்கலாம். தெரியாத ஒன்றை தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது ஒன்றும் தவறான விடயமும் அல்ல. ஆனால் விடயங்கள் தெரியாமல் விபரங்கள் புரியாமல் அவர் ஊடகங்களிடம் கருத்துரைப்பது அவருக்குள்ள அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையினையே காட்டுகிறது.

ஈழப்போராட்டத்தில், தமிழர் விடுதலை கோரும் வேட்கையில் திருகோணமலைக்கென ஒரு தனித்துவம் உண்டு. தமிழர் தாயகத்தின் தலைநகராக திருகோணமலை கருதப்பட்டது. தமிழர் ஆயுதப்போராட்டத்தில் திருகோணமலை மண் பெற்றதை விட இழந்தது ஏராளம். அந்த மண்ணில் நினைவேந்தலுக்கு பொலிஸ் அனுமதி பெற்று நடத்த வேண்டும் என்று கூறுவது எந்தவகையில் நியாயமானது? அப்படியே அனுமதி கேட்டாலும் கொடுக்கப்படுமா? அப்படியே வழங்கப்பட்டாலும்நடத்தவிடுவார்களா? பொலிஸாரின் தடுப்பையும் மீறி சாதாரண மக்கள் பொல்லுகளை ,ஹெல்மெட்களை கொண்டு தாக்கியதை ஆளுநர் கவனிக்கவில்லை போலும். இங்கே இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

திருகோணமலை பெரியகுளத்தில் விகாரை அமைக்கும் பணிகளுக்கு அனுமதி வழங்க கிழக்கு மாகாண ஆளுநர் மறுத்த நிலையில், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஓகஸ்ட் 28 இல் நடைபெற்றபோது மாவட்டச் செயலகத்திற்கு வெளியே, பௌத்த மதகுருக்கள் ஒன்றிணைந்து பாரிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பௌத்தமத குருக்கள், மாவட்டச் செயலகத்திற்குள் நுழைந்து,

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு படுகொலையின் 33வது ஆண்டு நினைவு நாள்

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பில் அப்பாவி தமிழ் மக்கள் 17 பேர் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 33வது ஆண்டு நினைவு தினம் கடந்த வியாழக்கிழமை (21) நினைவுகூரப்பட்டது.



கடந்த 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி இரவு இராணுவ சீருடை அணிந்த முஸ்லிம் ஊர்காவற்படையினர் புதுக் குடியிருப்பு கிராமத்திற்குள் புகுந்து தங்களது வீட்டில் உறங்கிக்யெகாண்டிருந்த தமிழ் மக்களை எழுப்பி தாங்கள் இராணுவத்தினர் என்றும் ஊரை சுற்றி வளைத்துள்ளதாகவும் விசாரணை செய்ய வேண்டும் எனவும் கூறி பெண்கள் ஆண்கள் முதியவர்கள்உட்பட 45 பேரைகடற்கரைஓரத்திற்கு அழைத்துச் சென்று கத்தியால் வெட்டி படுகொலை செய்துகொண்டிருக்கும் வேளை இளைஞர் ஒருவர் அவர்களின் பிடியில் இருந்து தப்பியோட அவசர அவசரமாக துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு ஊர்காவற்படையினர் தப்பியோடிவிட்டனர்.

இதன்போது இவர்களினால் 17 பேர் படுகொலைசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். குறித்த படுகொலையில் இருந்து உயிர் தப்பிய ஒரு இளைஞனின் திக் திக் நிமிடங்கள்.

கண்களும் கையும் கட்டப்பட்ட நிலையில் கடற்கரைக்கு அண்மையில் இருந்த குளிக்குள் படுகொலைசெய்யப்படுவதற்காககாத்திருந்தோம். நான் அன்று தப்பியோட முயற்சிக்காவிட்டால் எமது ஊரையே அழித்திருப்பார்கள் முஸ்லிம் ஊர்காவல் படையினர் - குறித்த படுகொலையில் இருந்து உயிர் தப்பியவரின் நெஞ்சை உருக்கும் வார்த்தைகள்.

செப்டம்பர் 21ம் திகதி புதுக்குடியிருப்பு இனப்படுகொலையின் 33வது ஆண்டு நினைவு தினமாகும்

அன்று 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதியாகும் எனக்கு அப்போது 25 வயது மட்டக்களப்பு ஆரையம்பதில் உள்ள புதுக் குடியிருப்பு கிராமம்தான் எனது வசிப்பிடம் நான் திருமணம் செய்யவில்லை அம்மா அப்பா மற்றும் சகோதர சகோதரிகளுடன் வசித்து வந்தேன் க.பொ.த உயர்தரம் வரையும் படித்து விட்டு அரச வேலைக்காக காத்துக்கொண்டிருந்த காலம் அது.

வழமைபோல் நான் எனது வீட்டில் (மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதிக்கு அருகில்) இரவு உணவை முடித்துவிட்டு எனது அம்மாவினுடைய அக்காவின் (பெரியம்மா) வீட்டுக்கு (கடற்கரைக்கு அண்மித்த இடம்) இரவு உறக்கத்திற்காகச் சென்றேன்.

அப்போது நேரம் ஒரு 8.00 மணியிருக்கும் பின்பு பிபிசி தமிழோசை கேட்டுவிட்டு 9.20 மணியளவில் உறங்குவதற்காகச் சென்றபோது எங்களது கதவை யாரோ தட்டி தமிழில் அழைப்பதைக் கேட்டபோது கதவைத் திறந்து பார்த்தேன் முத்துலிங்கம் என்பவர் எனது பெரியப்பாவின் பெயரைச் (கதிரண்ணன்) சொல்லி அழைத்தார் இராணுவத்தினர் சுற்றிவளைத் துள்ளதாகவும் விசாரணை செய்யப் போவதாகவும் பயப்படாமல் எல்லோரும் வரும்படியும் அவர் சொன்னார் அவருக்கருகில் இராணுவ உடைதரித்து ஆயுதங்களுடன் 4 பேர் நின்றார்கள் (இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படை வீரர்கள்;) (முத்துலிங்கம் என்பவருக்கு மூன்று மொழியும் தெரியும் இதனால் இவரைக் கொண்டே மற்றவர்களை வீடு வீடாகச் சென்று அழைத்தனர்) அப்போது என்னையும் எனது பெரியம்மா பெரியப்பா மற்றும் எனது சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு வீதிக்கு வந்தார்கள் அப்போது 40 இற்கு மேற்பட்டோர் வீதியில் வரிசையாக நின்பதைக் கண்டேன் எங்களையும் அவர்களுடன் நிற்கச் சொன்னார்கள்.



அனைவரையும் கடற்கரை நோக்கி அழைத்துச் சென்றார்கள் எனக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருந்தது ஏதோ விபரிதம் நடக்கப்போகின்றது என நான் மனதிற்குள் எண்ணிக்கொண்டேன்.

கடற்கரைக்கு அண்மையில் இருந்த ஒரு பெரிய குளிக்குள் எல்லோரையும் அமர வைத்துவிட்டு எனது பெரியப்பாவையும் மூன்று மொழிகளும் தெரிந்த முத்துலிங்கம் என்பவரையும் முதலில் அழைத்துக்கொண்டு கடற்கரைக்கு சென்றார்கள் அப்போது நின்ற ஒரு ஆயுததாரி (இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படைவீரர்) ஏதோ சிங்களத்தில் சொல்ல அதற்கு முத்துலிங்கம் என்பவர் "இப்போது இருவர் இருவராக விசாரணைக்கென்று பெரியவர் அழைக்கின்றார் நாங்கள் முதலில் போகின்றோம் அவர் விசாரிக்கின்றபோது சில நேரம் தடியால் அடிப்பார் இதனால் யாரும் அழுதால் நீங்கள் பயப்படத் தேவையில்லை" என சொல்லிவிட்டு

## ஏரம்பமூர்த்தி கங்காதரன்
### மூத்த ஊடகவியலாளர்

போனார்கள்.

ஆனால் திரும்பிவரவில்லை ஆனால் அழுகுரல் கேட்டது பின்பு இன்னும் இருவர் சென்றார்கள் அவர்களும் வரவில்லை அழுகுரல் தான் கேட்கின்றது அப்போது எனக்கு சந்தேகம் உறுதியாகிவிட்டது.

நான் பின்னுக்கு பின்னுக்கு சென்றேன் 10 பேருக்கு மேல் சென்றுவிட்டார்கள் அடுத்ததாக மிகவும் உறுதியான பலமுள்ளவர்கள் இருவர் (நல்லையா கோவிந்தன்) ஆகியோர் சென்றார்கள் அதில் கோவிந்தன் என்பவர் தப்பி ஓடுவதற்கு எத்தனிக்க அவரை துரத்திக்கொண்டு நீண்ட நேரமாக கொல்லுவதற்காக முயற்சிப்பதும் நல்லையா என்பவர் அவர்களுடன் சண்டை போட்டு தப்பிக்க எத்தனிக்கவும் அதிக நேரமாக அடுத்த இருவரை அழைப்பதற்கு அவர்கள் வரவில்லை அப்போது நான் எப்படியாவது ஓட வேண்டும் என முடிவெடுத்தேன்.

ஆனால் பின்பு வந்தவர்கள் பெண்களின் சாறிகளை கிழித்தும் எங்களது சட்டைகளை களட்டியும் எமது கண்ணையும் இரு கைகளையும் பின்புறமாகக் கட்டிவிட்டு இன்னும் இருவரை அழைத்துச் சென்றார்கள் அடுத்ததாக எனது முறை நானும் எனது மைத்துனர் முறையான ஒருவரும் செல்ல வேண்டும் அப்போது நான் அவரின் முதுகில் உரைந்து எனது கண்ணை களட்டினேன் பின்பு கையையும் ஒருமாதிரி களட்டிவிட்டு எனக்கு முன்னால் நின்ற ஆயுததாரியை (இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படைவீரர்) வேகமாக உதைத்து தள்ளிவிட்டு ஓடினேன் சிறிது நேரத்தில் அடம்பன் கொடியில் தடுக்கி விழுந்தேன் என்னை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்கள் நான் விழுந்ததால் எனக்கு படவில்லை என்னுடன் நின்ற எனது மைத்துனரும் மற்ற திசையில் ஓடினார்.

பின்பு நான் ஒரு மணிநேரமாக திசை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தமிழர்களை இலக்கு வைத்து மதுபான சாலைகள்

**துரைசாமி நடராஜா**

இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் மதுபானசாலைகளை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இது தொடர்பில் சிவில் சமூகத்தினரும், இளைஞர் அமைப்புக்களும் அதிருப்தியை வெளியிட்டு வருகின்றன. இது ஒரு நல்ல சகுனமாகும். கல்விமையச் சமூகமாக மலையக சமூகம் மேலெழும்ப வேண்டிய நிலையில் மதுபானச்சாலைகளை அதிகரிக்கும் முயற்சியானது மலையக சமூகத்தின் பல்வேறு அபிவிருத்திகளையும் சீர்குலைப்பதாகவே அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே இத்தகைய செயற்பாடுகள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவையே என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. இதேவேளை தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை இலக்குவைத்து மதுபானசாலைகளை அமைக்கும் இனவாதிகளின் நடவடிக்கை அண்மை காலமாக அதிகரித்து வருகின்றது. இது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் விழிப்புடன் செயற்பட்டு இத்தகைய செயற்பாடுகளை வேரறுப்பதில் அதீத கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.



‘வாழ்க்கையின் இன்னாத துன்பந்தரும் யதார்த்தங்களில் இருந்து தப்பிக்கொள்ளும் பொருட்டு மில்லியன் கணக்கான இளைஞர்கள் உலகிலே போதைப்பொருட்களை உபயோகிக்கின்றனர். போதைப்பொருள் அடிமைகள் ஒரு வகையான நோயாளிகள். வாழ்க்கை பொருளும் பயனும் உடையது. அதாவது ஒரு நோக்கும் நன்றியுணர்வும் நிறைந்தது என்பதனை அவர்களுக்கு விளங்கச் செய்தல் வேண்டும்’ என்கிறார் அன்னை தெரேசா. போதை அல்லது மது ஒருவரின் உயிரைக் குடிக்கின்றது. போதாக்குறைக்கு அவர் சார்ந்த குடும்பத்தினரையும் கண்ணீரில் மிதக்க வைக்கின்றது. மதுவினால் சீரழிந்த குடும்பங்கள் எண்ணிலடங்காது. பல்வேறு நோய்நொடிகள் ஏற்படுவதற்கும், வாழ வேண்டிய வயதில் மரணத்தை தழுவுவதற்கும் மது உந்துசக்தியாக அமைகின்றது. வாழ்க்கை என்பது ஒரு முறைதான். அந்த வாழ்க்கையை சிறப்பாக வாழ்வதற்கு இடையூறாக மதுபாவனை அமைகின்றது. மது என்பது சிலருக்கு தற்காலிக இன்பமாக இருந்தாலும் அது நிரந்தர துன்பமாகும் என்பதனை அவர்கள் விளங்கிக்கொள்ள தவறிவிடுகின்றார்கள். அவ்வாறு விளங்கிக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவர்களின் மதுபாவனை எல்லைமீறிப்போய், அவர்களை நடைப்பிணமாக்கி விடுகின்றது. ’கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரத்தைப்’ போன்று சிலரின் செயற்பாடுகள் அமைந்து விடுகின்றன.




‘ஒரு நாட்டை அழித்து விடுவதற்கு அணு ஆயுதங்கள் தேவையில்லை. ஒரு நாட்டின் இளைஞரை போதைப் பொருளில் மாட்டி விட்டால் அந்நாடு முழுவதும் திக்கற்று துன்பத்தில் அல்லல் படும். பௌதீக அழிவுகளின் சிதைவுகளில் இருந்து ஒரு நாட்டை கட்டியெழுப்பலாம். ஆனால் உளரீதியாக இளைஞர் அழிக்கப்பட்ட ஒரு நாட்டிற்கு எவ்விதத்திலும் விமோசனம் கிடைக்க மாட்டாது’’ என்பது பேராசிரியர் ஆர்.எம். கல்றாவின் கருத்தாகும். இக்கருத்தினை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. ஒரு சமூகத்தின் உரிமைக்குரலை ஒடுக்குவதற்கும், இளைஞர்களின் பாதையை திசைதிருப்புவதற்கும் மதுபாவனையை அச்சமூகத்தினரிடையே ஊக்குவிக்கும் செயற்பாடுகள் உலகளாவிய ரீதியில் இன்னும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இனவாதிகள் திட்டமிட்ட பட்டியலின் அடிப்படையில் அவ்வப்போது இத்தகைய பிற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அப்பாவி இளைஞர்கள் இனவாதிகளின் இத்தகையதீயசெயற்பாடுகளுக்குஅடிமையாகிதமது வாழ்க்கையையும், சமூகத்தின் எதிர்காலத்தையும் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர்.



மலையக சமூகத்தினர் இந்நாட்டில் தனித்துவமான ஒரு சமூகமாக உருவெடுத்துள்ளனர். இந்நாட்டில் அவர்களின் வரலாறு 200 வருடங்களாகியுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனினும் அவர்களின் வரலாற்றுக்கும் வாழ்க்கை அபிவிருத்திக்கும் இடையே அதிகரித்த விரிசல் நிலை காணப்படுகிறது. ஏனைய சமூகங்கள் அடைந்துள்ள அபிவிருத்தி இலக்குகளை மலையக சமூகத்தினர் இன்னும் எட்டிப்பிடிக்க வில்லை. இத்தகைய இலக்கு களை எட்டிப் பிடிப்பதற்கு இன்னும் எத்தனை காலம் காத்திருக்க வேண்டும் என்பது புரியாத புதிராகும். இந்நிலையில் மலையக சமூகம் பல்வேறு நன்மைகளையும் அடைந்து கொள்வதற்கு கல்வியில் அதிகளவு கரிசனை செலுத்த வேண்டியதன் அவசியத்தை புத்திஜீவிகள் தொடர்ச்சியாகவே வலியுறுத்தி வருகின்றனர். நிலைமை இவ்வாறிக்கையில் மதுபாவனை இம்முயற்சிகளுக்கு தடையாக இருந்துவிடக்கூடாது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மதுபாவனை அதிகரித்து காணப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. அதிலும் நுவரெலியா மாவட்டத்தில் மலையகத்திலேயே அதிகமான மதுபாவனை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடும் குளிர் காலநிலை மற்றும் சுற்றுலா பயணிகள் நுவரெலியாவிற்கு அதிகளவில் வருகை தரும் நிலையில் அவர்களிடையே மதுபாவனை அதிகரித்து காணப்படுதல் போன்ற நிலைமைகள் இம்மாவட்டத்தின் மதுபாவனை அதிகரிப்பில் செல்வாக்கு செலுத்துவதாக காரணம் தெரிவிக்கப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் கலால் திணைக்களத்தின் அனுமதி பெற்ற 234 மதுபானசாலைகள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்கள் காணப்படுகின்றன. நிலைமை இவ்வாறிருக்கையில் மேலும் புதிய மதுபான சாலைகளை திறப்பதற்கான முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வலியுறுத்துகின்றன. குறிப்பாக டயகம,இராகலை, தலவாக்கலையின் டெவன் பகுதிகளில் இவ்வாறு மதுபான சாலைகள் திறக்கப்படுவதற்கான அறிவித்தல் கடிதங்கள் குறித்த கிராம அதிகாரிகளால் காட்சிப்படுத்தப்பட்டு ஆட்சேபனைகளை தெரிவிக்கும்படி கோரப்பட்டுள்ளதாக அறிந்துகொள்ள முடிகின்றது. இதுபோன்றே நுவரெலியா மாவட்டத்தின் இன்னும் சில பகுதிகளிலும், மலையகத்தின் ஏனைய சில இடங்களிலும் மதுபானசாலைகளை திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

**சமூகப் பிரச்சினை**

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணனும் அண்மையில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# நாகோர்ணோ கரபாக் பிரதேசத்திலிருந்து ஆர்மீனிய மக்கள் வெளியேறி வருவதன் பின்னணி

தமிழில்: **ஜெயந்திரன்**

செப்ரெம்பர் 20ம் திகதி, அஸர்பைஜான் துருப்புகளிடம் நாகோர்ணோ- கரபாக் (*Nagorno - Karabakh*) பிரதேசம் சரணடைந்த நாளிலிருந்து, ஆர்மீனியன் (*Armenian*) இனத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்.



அஸர்பைஜான் (*Azerbaijan*) இராணுவத்தினர், நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தின் மீது ஒரு இராணுவத் தாக்குதலை ஆரம்பித்ததும், இரு தரப்புத் துருப்புகளிடையே மிகக் கடுமையான சண்டை நடைபெற்றது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, தாம் தமது ஆயுதங்களைக் களைவதாகவும் தமது இராணுவக் கட்டமைப்பைக் கலைப்பதாகவும் நாகோர்ணோ பிரதேசத்தைச் சேர்ந்த படைவீரர்கள் சம்மதம் தெரிவித்திருந்தார்கள்.

“அஸர்பைஜானிலிருந்து பிரிந்திருந்த நாகோர்ணோ கரபாக் குடியரசும் அது சார்ந்த அனைத்து நிறுவனங்களும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து செயலிழக்கும்” என்று அந்த பிரதேசத்தின் தலைவர் அறிவித்திருக்கிறார்.

குறிப்பிட்ட அந்தப் பிரதேசம் அஜர்பைஜானின் ஒரு பகுதியாகவே பன்னாட்டுச் சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்தது. இருப்பினும் கடந்த மூன்று தசாப்தங்களாக ஆர்மீனியன் இனத்தைச் சேர்ந்தவர்களே இப்பிரதேசத்தின் பெரும் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள்.

உலகில் மிக நீண்ட காலமாக நடைபெற்று வரும் மோதல்களில் இதுவும் ஒன்றாகும்

**நாகோர்ணோ கரபாக் எங்கே இருக்கிறது?**

கருங்கடலுக்கும் கஸ்பியன் கடலுக்கும் இடையே காணப்படுகின்ற தென் கோக்கஸஸ் மலைப்பிரதேசத்தில் நாகோர்ணோ கரபாக் பிரதேசம் அமைந்திருக்கிறது.




நாகோர்ணோ கரபாக் பிரச்சினை தொடர்பாக, அஸர்பைஜானும் ஆர்மீனியாவும் எண்பதுகளின் இறுதியிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் தமக்கு இடையே மிகவும் கடுமையாகப் போரிட்டிருந்தன. அதற்குப் பின்னரும் இந்த நாடுகளுக்கு இடையே கடுமையான வன்முறைகள் இடம்பெற்றிருக்கின்றன.

2020ம் ஆண்டு, ஆறுவாரங்கள் தொடர்ந்து நடைபெற்ற மிகவும் கடுமையான போரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

ரஷ்யாவிலிருந்து வரவழைக்கப்பட்ட அமைதிப்படையினரின் வருகையோடு, குறிப்பிட்ட போர் ஒரு முடிவுக்கு வந்தது. ஆனால் கடைசியாக நடைபெற்ற தாக்குதல் தொடங்க முன்னர் பல மாதங்களாக இப்பிரச்சினை கொதிநிலையிலேயே இருந்து வந்தது.

**தற்போது நடைபெற்ற மோதலுக்கான காரணம் என்ன?**

2022 டிசம்பரில், குறிப்பிட்ட பிரதேசத்துக்குச் செல்லும் மிகவும் முக்கியமான பாதையை அஜர்பைஜான் தடுத்ததைத் தொடர்ந்து, அங்கு மோதல்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவானது.

நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தையும் ஆர்மீனியக் குடியரசையும் இணைக்கின்ற ஒரே யொரு பாதையாக லச்சின் ஓடை மட்டுமே இது வரை இருந்துவந்தது.

நாகோர்ணோ கரபாக் பிரதேசத்துக்குரிய மிகவும் முக்கிய விநியோகப் பாதையாக லச்சின் ஓடை இருந்து வந்ததன் காரணத்தினால், பாதை தடைசெய்யப்பட்ட போது, அடிப்படை உணவு மற்றும் மருந்துகளுக்கு குறிப்பிட்ட பிரதேசத்தில் மிகவும் மோசமான தட்டுப்பாடு ஏற்பட்டது.

இராணுவ விநியோகங்களுக்குக் குறிப்பிட்ட பாதையை ஆர்மீனியா பயன்படுத்தி வருவதாக அஸர்பைஜான் குற்றஞ்சாட்டியது. ஆர்மீனியாவோ அந்தக் குற்றச்சாட்டை மறுத்திருந்தது. வேறொரு பாதை வழியாக உணவையும் வேறு உதவிகளையும் வழங்கத் தாங்கள் முன் வந்ததாகவும் அதனை நாகோர்ணோ கரபாக் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அஸர்பைஜானின் தலைநகரமான பாக்கு (*Baku*) தெரிவித்தது.

லச்சீன் பாதையையும் அஸர்பைஜானிலிருந்து வருகின்ற அக்டாம் பாதையைப் பயன்படுத்தவும் இதுவரை ரஷ்யாவைச் சேர்ந்த அமைதி காக்கும் படையினரே உதவி வந்தார்கள்.

ஆனால் பின்னர் மொஸ்கோவின் கவனமும் வளங்களும் உக்ரேனை ஆக்கிரமிப்பதில் குவிமையப்படுத்தப்பட்டன.

நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தைத் தாங்களாகவே கைவிட்டுச் செல்வதாக ஆர்மீனியப் பிரதம மந்திரி ரஷ்யாவைக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

தமது தரப்பில் 200 பேர் கொல்லப்பட்டதாக கரபாக் அதிகாரிகள் தெரிவித்திருக்கும் அதே நேரம், தங்கள் தரப்பில் 192 பேர் கொல்லப்பட்டதாக அஸர்பைஜான் தெரிவித்திருக்கிறது.

**மக்கள் வெளியேறுவதற்கான காரணம் என்ன?**

செப்ரெம்பர் 20ம் திகதி, ரஷ்யா மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து, நாகோர்ணோ கரபாக் பிரதேசத்திலுள்ள ஆர்மீனியன் இனத்தவர்களும் அஸர்பைஜானும் ஓர் போர்நிறுத்தத்தை அறிவித்ததைத் தொடர்ந்து 24 மணித்தியாலங்கள் நீடித்த போர் ஒரு முடிவுக்கு வந்தது.

நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தில் உள்ள ஆர்மீனியன் இனத்தைச் சார்ந்த இராணுவ வீரர்கள், தங்கள் ஆயுதங்களை முழுமையாகக் களைவதாகவும், தமது இராணுவ அமைப்புகளைக் கலைப்பதாகவும் ஒப்பந்தத்தில் உடன்பாடு தெரிவித்திருந்தார்கள். குறிப்பிட்ட பிரதேசத்தை அஸர்பைஜானுக்குள் உள்வாங்குவது தொடர்பாக இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

சமகாலத்தில் இப்பிரதேசத்தின் பிரிவினைத் தலைவரான சாம்வேல் சஹ்றமான்யன் அடுத்த வருடத் தொடக்கத்திலிருந்து தமது அரசுக்குரிய அனைத்து நிறுவன அமைப்புகளையும் கலைப்பதாக அறிவித்திருக்கிறார். இவ்வாறு நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தின் சுதந்திரப் போராட்டம் ஒரு முடிவுக்கு வருகிறது.



”தமது மக்களின் பாதுகாப்பையும் தமது மக்களின் முக்கிய தேவைகளையும் கருத்திற் கொண்டே அரசைக் கலைக்கும் முடிவு எடுக்கப்பட்டது” என்று சஹ்றமான்யன் தெரிவித்தார். சுதந்திரமாக, தன்னார்வமாக, எந்தவொரு தடையுமின்றி மக்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று அஸர்பைஜான் சம்மதம் தெரிவித்திருந்தது.

நாகோர்ணோ கரபாக் அஸர்பைஜானிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் குறிப்பிட்ட பிரதேசத்தைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட ஒரு வாரத்தில், நாகோர்ணோ கரபாக்கில் தமக்கு எந்தவித எதிர்காலமும் இல்லை என்று கருதி, ஒரு இலட்சத்து இருபதினாயிரம் சனத்தொகையைக் கொண்ட ஆர்மீனியன் மக்களில் அரைவாசிப்பேர் குறிப்பிட்ட பிரதேசத்தை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தை விட்டு வெளியேறிக்கொண்டிருந்த மக்களது பேருந்துகளாலும் மகிழுந்துகளாலும் லச்சீன் ஓடை நிறைந்திருந்தது.

”நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தில் ஆர்மீனியர்கள் எவரும் எதிர்காலத்தில் இருக்க மாட்டார்கள்” என்று ஆர்மீனியாவின் பிரதம மந்திரியான நிக்கோல் பஷின்யன் (*Nikol Bashinyan*) தெரிவித்திருக்கிறார்.

இனச்சுத்திகரிப்பு நடைபெறுவதாக ஆர்மீனியாவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுதலித்த அஸர்பைஜான், ஆர்மீனிய மக்களைச் சமமாக நடத்த விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறது.

பல தசாப்தங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த மோதல்களின் காரணமாக குறிப்பிட்ட பிரதேசத்தை விட்டு இடம்பெயர்ந்திருந்த அஸர்பைஜான் மக்கள், தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லக்கூடியதாக இருக்க வேண்டும் என்று அந்த நாட்டின் அதிபர் இல்ஹாம் அலியேவ் கருத்துத்தெரிவித்தார்.

குறிப்பிட்ட இரு நாடுகளும் எந்தவித அமைதி ஒப்பந்தத்திலும் இதுவரை கைச்சாத்திடவில்லை என்பது மட்டுமன்றி, பல வருடங்களாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தாலும் இருநாடுகளுக்கும் இடையே எந்தவித இராஜீக உறவுகளும் இருக்கவில்லை.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## மட்டக்களப்பு ... தொடர்ச்சி ...

தெரியாமல் ஒடித்திரிந்து ஊருக்குள் வந்து எனது வீட்டை அடைந்தேன். நான் ஓடியதால் பய மடைந்த அந்த ஊர்காவல் படையினர் பலரை அவசர அவசரமாக துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் விட்டு ஓடிவிட்டார்கள் இவர்களின் இந்த வெறிச் செயலினால் 17 பேர் படுகொலை செய்யப்பட்டும் 10 இற்கு மேற் பட்டோர் படுகாயமடைந்த நிலையிலும் மறுநாள் இருந்ததைக் கண்டோம்.

நான் தப்பிக்காமல் இருந்திருந்தால் அழைத்துச் செல்லப்பட்ட 45 பேரும் முதற்கட்ட மாக படுகொலை செய்யப்பட்டு அடுத்த கட்ட மாக இன்னும் ஊருக்குள் வந்து அடுத்தடுத்த கட்டங்களாக படுகொலை செய்திருப்பார்கள் அந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர்.

அன்று நடந்தேறிய அந்த கொடூரமான படுகொலைச் சம்பவத்தினை நினைத்தால் இப் போதும் எனது நெஞ்சு காய்கின்றதென கூறினார் குறித்த படுகொலையில் இருந்து உயிர் தப்பிய பேரின்பராசா என்பவர்.

இந்த படுகொலைச் சம்பவம் இடம்பெறு வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இடம்பெற்ற காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையின் எதிரொலியாகத்தான் இந்த புதுக்குடியிருப்பு படுகொலை அப்போது நோக்கப்பட்டது.

ஏனெனில் இதில் படுகொலை செய்யப் பட்ட 12 வயதுடைய ஒரு சிறுவனை இந்த இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படைவீரர்கள் சிறிய சிறிய துண்டாக அரிந்து படுகொலை செய்திருந்தார்கள்.

இந்தச் சிறுவன் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து வீரச்சாவடைந்த தனது அண் ணனின் எட்டாவது நாளுக்கு தனது வீட்டில் பொங்கல் படைத்துவிட்டு அந்தப் பொங்கலை அவரின் உறவினருக்கு கொடுப்பதற்காக வீதியில் வந்தபோது இந்தக் கொலைகாரர்களின் பிடியில் சிக்கி இருந்தார் அப்போது அவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில்தான் இவ்வாறு ஈவு இரக்கமின்றிதுண்டுதுண்டாகவெட்டிபடுகொலை செய்யப்பபட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

• • •

## தமிழர்களுக்கான ... தொடர்ச்சி ...

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை இடைநடுவே தடுத்து, அங்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். முறைப்படி அனுமதி பெற்றா பிக்குகள் உள்ளே வந்தனர்?அப்படி அத்துமீறியவர்கள் மீது சட்டம் பாய்ந்ததா? இதே தமிழர்கள் எவராவது அபப்டி உள்ளே வந்திருக்க முடி யுமா?அல்லது சட்டப்படி வரத்தான் அனுமதி கிடைத்திருக்குமா?

ஆளுநர் என்பவர் அரசாங்கத்தின் சேவகர். அது அனைவருக்கும் தெரியும். ஆனால் ஜனநாய கத்தின்பால் , நீதியின் பேரால் அவர் நியாயத்தின் பக்கம் நிற்கவேண்டிய கடமையும் பொறுப்பும் இருக்கிறது. ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க அவருக்கு கடப்பாடு இருக்கிறது.

அதைவிடுத்து சட்டம், ஒழுங்குஎன்று பேசு வதன்மூலம் அரச இயந்தி ரத்தை திருப்திப்படுத்த அவர் முயல்வாரானால் தமிழ்ச் சமூகம் மட்டு மல்ல வரலாறும் அவரை ஒருபோதும் மன் னிக்காது"என அந்த ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் இவ்வாறான நிலைமை ஏற்படும் என்பதை நாங்கள் முன்னே கூறி யிருந்தோம். கிழக்கு மாகாண ஆளுனர் எவ் வாறு செயற்பாடுகளை மேற்கொள்ளுவார் என்பதையும் தெரிவித்திருந்தோம். இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் தமிழர்களின் நிலங்களை அபகரிப்பு செய்வதில் சட்டத்தினை நடைமுறைப்படுத்தாத நிலையே இருந்துவருகின்றது.

இரு தினங்களுக்கு முன்னர் கரடியானறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வனத் துறையினரால் கல் இடப்பட்ட பகுதியில் அத்து மீறிய பயிர்ச்செய்கை முன்னெடுத்தாக தெரிவித்து தமிழ் விவசாயி ஒருவருக்கு ஏறாவூர் நீதிமன்றம் ஊடாக 20,20,000? ரூபா தண்டப்பணம் விதிக்கப் பட்டுள்ளது.

அதே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலத் தமடு, மாதவனை பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கு சேனை பயிர்ச்செய்னை முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் இதே வனத்துறையோ பொலிஸோ எந்த வித நடவடிக்கையினையும் எடுக்கவில்லை. அவ்வாறானால் சட்டமானது தமிழர்களுக்கு ஒரு விதமாகவும் சிங்களவர்களுக்கு ஒருவிதமாகவும் செயற்படுவது உறுதியாகின்றது.

எனவே இந்த நாட்டில் தமிழர்களுக்கான நீதியையும் அவர்களுக்கான நிலம்தொடர்பான உரிமையினையும் பெற்றுக்கொடுக்கவேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உள்ளது. இலங்கை அரசாங்கத்தினை பொறுத்தவரை யில் தமிழர் பகுதிகளை அபகரிப்பதையே குறி காக கொண்டுள்ளது. தமது சட்டங்களையும் நீதித்துறையினையும் அதற்காக பயன்படுத்திவரு கின்றது. எனவே தமிழர்களுக்கான நீதியையும் உரிமையினையும் உறுதிப்படுத்துவதற்கான நட வடிக்கை எடுக்கவேண்டியது அனைவரது கடமை யுமாகும்.

• • •

## சிறிலங்காவின் ... தொடர்ச்சி ...

களான நாயாறு, தையீட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல் சமனலங் குளம், கன்னியா வென்னீரூற்று போன்ற இடங்களிலும் பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மயிலந் தமடு, மாதவனை பகுதிகளில் மூன்று லட்சம் கால்நடைகள் பயன்பெறக்கூடிய மேச்சல் நிலங்களில் வசித்தவந்த தமிழர்கள் துரத்தி யடிக்கப்பட்டு, நீதிமன்ற உதரவினைமீறி அவ்விடங்களில் சட்டவிரோதமான முறையில் சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர் களான சிங்கள இனத்தவர் குடியேற்றப் படுகின்றனர். மாதுரு ஓயா வலது கரை மேம்பாட்டு திட்டத்தினைப் பயன்படுத்தி இனப்பரம்பலை மாற்றும் விதத்தில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டு அவ்விடங்களில் சிங்கள வர்கள் குடியேற்றப்படுகின்றனர்.

அரசின் மேற்படி இனவாத நடவடிக்கை களுக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் போராட்டங்களை மேற்கொள் பவர்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறி லங்கா அரசாங்கமானது இச்சட்டத்தினை நீக்குவதாக ஐநா மனிதவுரிமைச் சபைக்கு உறுதியளித்திருந்தது, எனது சகாவான திரு. செல்வராசா கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதுடன், அவர் மீது வன்மு றையை கட்டவிழ்த்துவிட்டதனை இங்கு சுட்டிக் காட்டலாம்.

தலைவர் அவர்களே, 2012ம் ஆண்டி லிருந்து தொடர்ச்சியாக இவ்விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றபோதிலும், சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதுவித மாற்றமு மின்றித் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பங்களாதேசத்தின் ... தொடர்ச்சி ...

தென்கிழக்கு கடற்கரையில் தான் அதிக கப் பல்கள் உடைக்கப்படுகின்றன. அதன் மூலம் கிடைக்கும் உலோ கங்கள் கட்டிட பணிகளுக்கு பயன் படுத்தப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் இருந்து அங்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள நிறுவனங்கள் 520 இற்கு மேற்பட்ட கப்பல்களை அனுப்பியுள்ளன. அவற்றை உடைக்கும் பணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பணியில் ஈடுபடுபவர்கள் சரியான பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவதில்லை. கப்பல்களை உடைக்கும் நிறுவனங்கள் இலா பத்தை மட்டுமே பார்க்கின்றனர், சூழல் மாசடை தல் மற்றும் மக்கள் கொல்லப்படுவதை அவர்கள் கருத்தில் எடுப்பதில்லை. பணியாளர்கள் தமது காலுறைகளை கையுறைகளாக பாவிப்பதுடன், நஞ்சு வாயுக்களில் இருந்து தப்புவதற்காக தமது மேற்சட்டைகளால் முகத்தை மறைக்கின்றனர். அவர்களிடம் உகந்த பாதுகாப்பு உடைகள் இல்லை.

110 பணியாளர்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 33 பேர் சுவாசப்பை புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ள தாக அது மேலும் தனது அறிக்கையில் தெரிவித் தள்ளது.

## அமெரிக்க ... தொடர்ச்சி ...

25 இற்கு மேற்பட்ட அதிகாரிகளின் தகவல்கள் திருடப்பட்டுள்ளன. அதில் பல ஆயிரம் ஆவ ணங்கள் உள்ளன. அதில் வெளிவிவகாரத் திணைக்களத்தின் ஆவணங்கள் 60,000.

சீனா அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப் படும் சைபர் தாக்குதல்களுக்கு எதிராக அமெ ரிக்கா கடும் நடவடிக்கை எடுக்கும் என அமெரிக் காவின் வெளிவிவகார அமைச்சர் அந்தோனி பிளிங்டன் முன்னர் சீனாவை எச்சரித் திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## நகொர்னோ ... தொடர்ச்சி ...

தனது நகொர்னோ - கரபா குடியரசு கலைக்கப் படுவதாக தலைவர் சாம்வேல் சக்ரமன்யன் தெரிவித்துள்ளார். இந்த பகுதிய ஆர்ஜாபைஜா னின் பிரதேசம் என அனைத் துலக சமூகத்தினால் 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தாலும் அதனை ஆர் மேனியா கைப்பற்றியிருந்தது.

ஆர்மேனியாவினால் கடந்த 30 ஆண்டுகள் நிர்வகிக்கப்பட்ட இந்த பகுதியில் இருந்த 120,000 ஆர்மேனிய மக்களில் 70,000 இற்கு மேற் பட்டவர்கள் தற்போது அந்த பகுதியில் இருந்து வெளியேறியுள்ளனர்.

அங்கு இனஅழிப்பு நிகழலாம் எனவும், அனைத்துலக பார்வையாளர்கள் ஆர்ஜாபை ஜானினால் கைப்பற்றப்பட்ட பகுதிக்கு அனு மாதிக்கப்பட வேண்டும் எனவும் மேற் குலக நாடுகள் விடுத்த வேண்டுகோளை ஆர்ஜாபை ஜான் நிராகரித்துள்ளது.

## இலங்கைக்கு நிதி ... தொடர்ச்சி ...

அந்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை, இலங்கையின் வரி மறுசீரமைப்பு போதுமானதல்ல என தெரிவித்து அதன் இரண்டாவது தவணை நிதியான 333 மில்லியன் டொலர்களை வழங்க நாணய நிதியம் மறுத்துள்ளது.

இலங்கை அரசு நிபந்தனைகளை நிறை வேற்ற நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக என ஆய்வுகளை மேற்கொண்ட அனைத்துலக நாணய நிதியக் குழு புதன்கிழமை (27) அதன் இரண்டுவார அறிக்கையை வெளியிட்டிருந்தது. இலங்கையில் பணவீக்கம் குறைந்துள்ளது. வெளிநாட்டு கையிருப்பு 1.5 பில்லியன் டொலர் களாக அதிகரித்துள்ளது. ஆனால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.1 விகிதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது என அது தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## தமிழர்களை ... தொடர்ச்சி ...

பாராளுமன்றத்தில் தனது கவலையை வெளியிட்டிருந்தார். ’சுற்றுலாத்துறை கைத்தொழிலை விரிவுபடுத்துவதாகக் குறிப்பிட்டு மலையகப் பகுதிகளில் மதுபானசாலைகளை அமைப்பது முறையற்றது. நுவரெலியாமாவட்டத்தில் டயகம பகுதியில் மதுபான சாலைகளை அமைப்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது நுவரெலியா பகுதியில் மதுபான சாலைகளை அமைப்பதற்கு நோட்டீஸ் விடுக்கப்பட்டுள்ளது. ஆளும் தரப்புக்கு ஒரு உறுப்பினர் சென்றால் அவருக்கு மூன்று மதுபான சாலைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. அரசியல் நோக்கத்துக்காக மலையக மக்களின் வாழ்க்கையை இல்லாதொழிக்க வேண்டாம். பெருந்தோட்ட மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மதுபான சாலைகளை புதிதாக அமைப்பது பாரிய சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் ‘ என்று இராதாகிருஷ்ணன் இதன்போது எச்சரிக்கை விடுத்திருந்தார். உண்மையில் புதிய மதுபான சாலைகளை அமைப்பதென்பது ‘தாழியில் இருந்து அடுப்புக்குள்’ மலையக மக்களை தள்ளிவிடும் ஒரு நடவடிக்கையேயாகும்.

நாட்டில் பாடசாலை மாணவர்களிடையே தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனால் மாணவர் சமூகத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும் சீரழிந்து வரும் நிலையில் அரசாங்கம் இதனைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. எனினும் ‘வேலியே பயிரை மேய்ந்த’ சில சம்பவங்களும் இல்லாமலில்லை. இந்நிலையில் போதைப்பொருள் வியாபாரிகளிடம் இருந்து மாணவர்களைக் காப்பாற்ற தனியான செயலணி வேண்டுமென்ற கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார். வடபகுதியில் போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சிகிச்சை நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இலங்கையின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 60 வீதமானோர் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடனான குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. போதைப் பொருள் பாவனையாளர்களுக்கு வயது அடிப்படையில் புனர்வாழ்வளிக்க தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் விசேட புனர் வாழ்வுமையங்களைஅமைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் அரசதரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன. நாட்டின் நிலைமை இவ்வாறிக்கையில் மது பாவனை மற்றும் போதைப்பொருள் என்பவற்றை நாட்டில் இருந்தும் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கு துரிதமாக அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலைமை மேலெழுந்துள்ளது. இந்நிலையில் மலையகப் பகுதிகளிலோ அல்லது நாட் டின் வேறெந்த பகுதிகளிலோ மதுபான சாலைகளை திறக்கும் முயற்சிகள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும் என்பதோடு அதற்கு எதிராக குரல் கொடுக்கவும் வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

குறிப்பாக மலையக இளைஞர்கள் சிவில் சமூகத்தினருடன் இணைந்து மதுபான சாலைகளை திறக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி வருவது பாராட்டத்தக்கதாகும். இளைஞர்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் உலக வரலாற்றில் சாதக விளைவுகள் பலவும் ஏற்படுவதற்கு உந்துசக்தியாக இருந்திருக்கின்றன. இன்னும் இருந்தும் வருகின்றன. எனவே இளைஞர்கள் இதனை கருத்தில் கொண்டு மதுபான பாவனையை மலையகத்தில் கட்டுப்படுத்தவும் அடித்தளமிடுதல் வேண்டும். இம்முயற்சி மலையக சமூகத்தின் பல்துறை மேம்பாட்டிற்கும் வாய்ப்பளிக்கும் என்பதோடு ஏனைய சகலதுறை சார்ந்தவர்களும் இளைஞர்களின் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும். மதுபான சாலைகளை புதிதாக திறக்கும் முயற்சிகளை வேரறுத்து தோட்டங்கள்தோறும் வாசிகசாலைகளை ஏற்படுத்த மலையக அரசியல்வாதிகள் அரசாங்கத்தினை வலியுறுத்த வேண்டும்.

• • •

## இந்தியாவுக்கு ... தொடர்ச்சி ...

பாடே சரியானது எனவே இலங்கை இந்த விவகாரத்தில் இந்தியாவின் பக்கமே நிற்கும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இந்திய ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார். இலங்கை மீது கனடா குற்றம் சுமத்துவதைபோல இந்தியா மீதும் ரூடோ ஆதாரங்களின்றி குற்றம் சுமத்துவதாக சப்ரி கனடாவை சாடியுள்ளார்.

ஆனால் இந்த விவகாரத்தில் நடுநிலமையை கடைப்பிடிக்கவே இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கா விரும்பியிருந்தார். எனினும் சப்ரியின் கருத்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பல கருத்துவேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஆபிரிக்க ... தொடர்ச்சி ...

வியாழக்கிழமை(28) தெரிவித்துள்ள னர்.

அண்மைக்காலமாக ஆபரிக்க நாடுகளில் பல இராணுவப்புரட்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் பல நாடுகளில் மேற்குலகத்திற்கு ஆதரவான அரசுகள் அகற்றப்பட்டுள்ளன. அண்மையில் நைகரில் இடம்பெற்ற புரட்சியை தொடர்ந்து அங்கிருந்து பிரான்ஸ் தூதுவர் வெளியேறியுள்ளதுடன், பிரான்ஸ் நாட்டு படையினரும் வெளியேறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ரஸ்யாவும், மேற்குலகமும் இந்த புரட்சிகளின் பின்னனியில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் ... தொடர்ச்சி ...

பொருளாதார நெருக்கடி, ஈஸ்டர் தாக்குதல்கள், கோவிட்-19 தொற்று நோயின் பாதிப்பிலிருந்து மீண்டுவர முயலும் நாட்டிற்கு இது அதிக அவகாசத்தை வழங்கும்.

இருப்பினும், தேர்தலை ஒத்திவைப்பதற்கு எதிராக பல வாதங்களும் உள்ளன. முதலாவதாக, இது ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் மீறுவதாகும். இரண்டாவதாக, இது அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மேலும் சிதைக்கும். மூன்றாவதாக, இது ஸ்திரமின்மை மற்றும் வன்முறைக்கு வழிவகுக்கும்.

ஜனாதிபதித் தேர்தலை ரணில் ஒத்திவைப்பாரா இல்லையா என்பது இன்று வரை தெளிவாகத் தெரியவில்லை. அவர் தனது திட்டங்கள் குறித்து இன்னும் பகிரங்க அறிவிப்பை வெளியிடவில்லை. எவ்வாறாயினும், ஒத்திவைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. ரணிலுக்கு நெருக்கமான வஜிர போன்றவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் அதனைத்தான் பிரதிபலிக்கின்றன.

தேர்தலை ஒத்திவைப்பதற்கு பொதுமக்களிடம் கடும் எதிர்ப்பு இருந்தால், ரணில் அவ்வாறு செய்வதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும். இரண்டாவதாக, தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என்று சர்வதேச சமூகம் கடுமையான அழுத்தத்தைக் கொடுத்தால், அவர் அதற்கு இணங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதா இல்லையா என்பது விக்கிரமசிங்கவின் முடிவிலேயே உள்ளது. இருப்பினும், அவர் முடிவெடுப்பதற்கு முன்னர் நிலைமைகளைத் தெளிவாக ஆராய்ந்து நிதானமாக ஒரு தீர்மானத்துக்கு வருவார் என நம்பலாம். நவம்பர் முதல் வாரத்தில் வரப்போகும் அடுத்த வருடத்துக்கான பட்ஜெட் நிலைமைகள் எவ்வாறு அமையும் என்பதை கோடிகாட்டுவதாக இருக்கும்.

• • •

## தமிழ்த் தலைமை ... தொடர்ச்சி ...

இருப்பார்கள் இதற்கு அப்பால் ஒரு அரசியல் இயக்கத்தை அவர்கள் நடத்துவது இல்லை.

ஆகவே இது ஒரு பொது மக்கள் இயக்கத்தால் அரசியல் கட்சிகளின் கலப்பின்றி மக்கள் இயக்கம் ஒன்றால் முன்னெடுக்கபடும் போதுதான் இவை வெற்றி அளிக்கும்.

**நினைவேந்தல் நிகழ்வுகளை தடை செய்வதற்கு பொலிசார் இறுதிவரையில் முயற்சி செய்தார்கள். அதாவது இந்த நினைவுகள் மக்களிடம் கொண்டு செல்வதை அரசாங்கம் விரும்பவில்லை என்பதை இது பிரதிபலிக்கின்றதா?**

உண்மையில் இந்த நிகழ்வுகளை மீட்பதென்பதே இந்த இனம் எழுகின்ற விடையம்தான் எனவே அதை பேரினவாதம் விரும்பாது ஆனால் எல்லாவற்றையும் தடை போடவும் முடியாது நினைவேந்தல் மற்றும் மரணித்த உறவுகளை நினைவு கூர்வது என்பது தடுப்பது கடினம் ஆனால் அவர்கள் அதனை தடுப்பதற்கு முயற்சிப்பார்கள் ஆனால் எல்லா இடமும் அதனை தடுக்க இயலாது என்பதைத்தான் இந்த நிகழ்வு காட்டுகின்றது

ஆகவே உண்மை என்னவென்றால் தமது மரணித்த உறவுகளை நினைவு கூர்வது அடிப்படை உரிமை ஆனாலும் பேரினவாதம் தன்னிடம் அரசு இருப்பது என்பதால் அதை தடைசெய்ய பார்க்கிறது அவ்வளவு தான்.

**திலீபனின் நினைவேந்தலில் மக்கள் திரட்சி ஒன்றை நாம் பாா்த்தோம். ஆனால், தாயகப் பகுதிகளில் நடைபெறும் போராட்டங்களில் இது போல பெருமளவு மக்களைத் திரட்ட முடியாத ஒரு நிலை கணப்படுகின்றது. அதற்கு என்ன காரணம்?**

அதாவது நான் முன்பு கூறியதுபோல் அவர்களுடைய வீரர்கள் வீர வணக்கம் என்பது அவர்களது அடிமனதுள்ளே ஆழப் பதிந்ததொரு விசயம். மற்ற விசயங்களிலே அரசியல் வாதிகள் முன்னுக்கு நிற்கின்ற பொழுது அது நடக்குமா நடக்காதா அல்லது அரசியல் வாதிகள் செய்வார்களா செய்ய மாட்டார்களா என்று குழம்புவார்கள் ஆனால் இந்த விஷயத்தில் மாத்திரம் அவர்களுடைய மனதில் ஆழப்புதைந்தபடியால் தங்களையும் அறியாமல் வெளியில் வந்து விடுகிறார்கள் ஒரு மன உந்தல் ஒன்று ஏற்பட்டு விட்டது முதல் கணம் வரை அதை சிந்திக்காதவர்கள் அந்தக் கணம் வரும்பொழுது உடன் வந்து விடுவார்கள் .

ஏன் என்றால் ஆழ் மனதில் புதைந்த ஒரு விடையம் ஆகவே நான் கூறுவது என்னவென்றால் இந்த வேலை மனங்களில் நடக்கவேண்டும் இது ஒரு வாய்ப்பு என்னவென்றால் நுகர்வுச் சூழல் இந்த நுகர்வு கலாச்சாரம் மேல் மனதில் அதாவது அவர்களது மூளையில்தான் நடக்கும் அவர்களுடைய மனதில் நடக்கவில்லை ஆகவே அவர்களது மனதில் இருப்பது இந்த விஷயங்கள் தான் ஆகவே அதனை தொட்டு அவர்களை அணிதிரட்டுவோமாக இருந்தால் அவர்கள் மாறுவதற்கும் ஒரு மக்கள் இயக்கம் எழுச்சி பெறுவதர்க்கும் வாய்ப்பு இருக்கின்றது.

• • •

## நாகோர்ணோ ... தொடர்ச்சி ...

### போருக்கு இட்டுச்சென்ற காரணிகள் எவை?

1920 ம் ஆண்டில் தற்கால ஆர்மீனியாவும் அஸர்பைஜானும் சோவியத் ஒன்றியத்தின் பகுதிகளாக இணைக்கப்பட்டன. அதே நேரம் நாகோர்ணோ கரபாக் என வரையறுக்கப்பட்ட பிரதேசம் ஆர்மீனிய மக்கள் பெரும்பான்மையாக வதியும் பிரதேசமாக இருந்த போதிலும் அஸர்பைஜானின் ஆளுகைக்குள்ளேயே அது இருந்துவந்தது.

1980 களில் சோவியத் ஒன்றியம் உடை யத் தொடங்கிய காலகட்டத்தில், தாங்கள் ஆர்மீனியாவின் ஒரு பகுதியாக மாற விரும்புவதாக நாகோர்ணோ கரபாக் பிரதேசத்துக்குரிய நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்களிப்பில் முடிவானது.

இந்தப் பிரிவினைப் போராட்டத்தை அஸர்பைஜான் அடக்க முற்பட்ட வேளை, ஆர்மீனியா அதற்குத் தனது முழுமயான ஆதரவை வழங்கியது.

இக்காரணங்களினால் நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தில் வாழ்ந்த இரு இனங்களுக்கும் இடையே இனமோதல்கள் ஏற்பட்டன. ஆர்மீனியா, அஸர்பைஜான் ஆகிய இரு நாடுகளும் முறையே தனிநாடுகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்திய பின்னர். மோதல்கள் போராக வெடித்தன. இந்தப் போர்களின் காரணமாக பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டதோடு மக்கள் மோசமான துன்பங்களையும் அனுபவித்தனர்.

ஆர்மீனியாவிலே வாழ்ந்த அஸர்பைஜானிய மக்கள் பல்லாயிரக்கணக்கில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, அகதிகளாக அஸர்பைஜானில் குடியேறிய நிகழ்வுகளை பிபிசி செய்திச் சேவையின் அஸர்பைஜான் பிரிவுக்குப் பொறுப்பான கோனுல் கலிலோவா நினைவு கூர்ந்தார்.

1992;ம் ஆண்டு, பெப்ரவரி மாதத்தில், நாகோர்ணோ கரபாக் பிரதேசத்துக்கு அருகில் அமைந்திருந்த அஸர்பைஜானைச் சேர்ந்த கோஜாலி என்ற நகரத்தில் வாழ்ந்த மக்கள் ரஷ்யப் படை வீரர்கள் துணைநிற்க, ஆர்மீனிய வீரர்களினால் கொல்லப்பட்டனர். அஸர்பைஜான் தரவுகளின் படி 600க்கு மேற்பட்ட அஸர்பைஜானிய மக்கள் கொல்லப்பட்டனர். இப்படுகொலை தொடர்பான தகவல்களையும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் ஆர்மீனியா மறுத்துவருகிறது.

கடந்த பல வருடங்களாக, இரு இனங்களையும் சேர்ந்த, பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டது மட்டுமன்றி, பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடப்பெயர்வுகளையும் சந்தித்திருக்கின்றனர். இனச்சுத்திகரிப்பு மற்றும் படுகொலைகளை மேற்கொண்டதாக இரு தரப்பினர் மேலும் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

1990களில் அஸர்பைஜான் துருப்புகளை ஆர்மீனிய இராணுவத்தினர் நாகோர்ணோ கரபாக் பிரதேசத்திலிருந்து வெளியேற்றியிருந்தனர்.

"இழைக்கப்பட்ட கொடுமைகளை தற்போதைய இளையோர் எவ்வளவு தூரத்துக்கு அறிந்து வைந்திருக்கிறார்கள் எனத் தனக்குத் தெரியவில்லை" என்று காலிலோவ் கூறுகிறார்.

கடந்த காலங்களில் கொல்லப்பட்ட அஸர்பைஜானிய மக்கள் தொடர்பாக ஆர்மீனி யாவில் யாரும்வாய்திறப்பதில்லை. அதேபோல, 1980களின் இறுதியில், சும்காயிற் மற்றும் பாக்கு நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட இனக்கலவரங்கள் தொடர்பாகவும் அஸர்பைஜானிய மக்களுக்கு யாரும் எடுத்துச் சொல்வதில்லை. ஆனால் இந்த இனக் கலவரங்கள் பற்றிய அஸர்பைஜானின் பார்வை வேறாக இருக்கிறது.

ஆர்மீனிய இராணுவத்தினர் நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் கைப்பற்றியதைத் தொடர்ந்து, முதலாவது நாகோர்ணோ கரபாக் போர் முடிவுக்கு வந்தது. ரஷ்யாவின் முயற்சியினால் அப்போது போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் படி, நாகோர்ணோ கரபாக் பிரதேசம் அஸர்பைஜானின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இப்பிரதேசம் அக்காலத்திலிருந்து, ஆர்மீனிய இனத்தைச் சேர்ந்தவர்களினால் தன்னிச்சையாகக் குடியரசாக அறிவிக்கப்பட்டு ஆர்மீனிய மக்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆர்மீனிய அரசு இதற்கான ஆதரவை வழங்கி வந்திருக்கிறது.

### 2020 இல் நடந்தது என்ன?

நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தில் ஒரு அமைதியற்ற சூழலே எப்போதும் நிலவி வந்தது. மோதல்கள் பல தடவைகள் நடைபெற்றன. இடையிடையே அமைதிச்சூழலும் நிலவியது.

மூன்று வருடத்துக்கு முன்னர் ஆறு வாரங்களாகத் தொடர்ந்து நடைபெற்ற மிகக் கடுமையான மோதலே, 1990ம் ஆண்டு நடைபெற்ற போருக்குப் பின்னர், இடம்பெற்ற ஆகப்பெரிய மோதலாகும்.

அஸர்பைஜான் தாம் இழந்த பிரதேசங்களை மீளவும் கைப்பற்றியது. 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் ரஷ்யாவின் துணையுடன் சமாதான ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட போது, 1994ம் ஆண்டில் அஸர்பைஜான் இழந்த நாகோர்ணோ கரபாக் பிரதேசத்தைச் சூழவுள்ள அனைத்து நகரங்களையும் அஸர்பைஜான் மீட்டுக்கொண்டது.

அந்த ஒப்பந்தத்திற்கு ஏற்ப இந்தப் பிரதேசங்களிலிருந்து ஆர்மீனியா வெளியேற வேண்டும் என்ற உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் அந்தப் பிரதேசத்தின் மிகவும் குறுகிய பகுதியையே ஆர்மீனிய படைகள் தம் வசம் வைத்திருந்தன.

### ரஷ்யாவினதும் துருக்கியினதும் ஆதரவு யாருக்கு?

இப்பிரதேசத்திலுள்ள வல்லாதிக்க சக்திகள், இந்த இருநாடுகளுக்கும் இடையேயுள்ள மோதலில் கணிசமான பங்கை வகித்திருக்கின்றன.

அஸர்பைஜானுடன் மிக நெருக்கமான பண்பாட்டு ரீதியிலான பிணைப்புகளை துருக்கி கொண்டிருக்கிறது. 2020ம் ஆண்டில் நடைபெற்ற போரில் தாம் இழந்த பிரதேசங்களை மீட்பதற்கு துருக்கித் தயாரிப்பான பேறாக்ரர் ஆளில்லா விமானங்கள் முக்கிய பங்கை வகித்தன.

ஆர்மீனியாவைப் பொறுத்தவரையில் அது பாரம்பரியமாக ரஷ்யாவுடன் நல்ல உறவைக் கொண்டிருக்கிறது. ஆர்மீனியாவில் ரஷ்யாவின் இராணுவத்தளம் ஒன்று அமைந்திருக்கிறது. சோவியத் ஒன்றியத்தில் முன்னர் அங்கம் வகித்த ஆறு நாடுகளால் உருவாக்கப்படபட்ட கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு என்ற அமைப்பில் இரண்டு நாடுகளுமே உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

அரசுக்கு எதிரான பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆர்மீனியாவில் முன்னெடுத்த நிக்கோல் பஷின்யன் ஆர்மீனியாவின் பிரதமராகப் பதவியேற்ற போது, ஆர்மீனியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான உறவு பாதிப்புக்கு உள்ளாகத் தொடங்கியது. தமது நாட்டின் பாதுகாப்புக்காக ரஷ்யா என்ற ஒரு நாட்டில் மட்டும் தங்கியிருப்பது மூலோபாய ரீதியிலான தவறு என்று அவர் பரப்புரை செய்து வந்திருக்கிறார்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் ஆர்மீனியா அமெரிக்காவுடன் இணைந்து இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தது.

நாகோர்ணோ கரபாக்கில் அண்மையில் நடைபெற்ற சண்டையைத் தொடர்ந்து, ரஷ்ய அமைதிப்படையினரின் பங்கு தொடர்பாக பஷின்யன் பகிரங்கமாகவே விமர்சித்திருந்தார். பாதுகாப்புக் கூட்டமைப்பில் ஆர்மீனியா தொடர்ந்தும் அங்கம் வகிப்பதன் பயன் தொடர்பாகவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

"ரஷ்யாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றுகள்" என்று கூறி பஷின்யனின் விமர்சனங்களை ரஷ்யா நிராகரித்திருக்கிறது.

ரஷ்யாவுடன் ஆர்மீனியா கொண்டிருக்கின்ற பன்முகப்படுத்தப்பட்ட, மற்றும் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த உறவைச் சீரழிக்கயெறவான் தலைமைத்துவம் வேண்டுமென்றே முயற்சி செய்வதாகவும், மேற்குலகத்தின் திருவிளையாடல்களுக்கு ஆர்மீனியாவை அவர் பணயம் வைப்பதாகவும் ரஷ்ய வெளியுறவு அமைச்சு தெரிவித்தது. பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் ஓர் உறுப்பு நாடாக மாறுவதற்கு ஆர்மீனியா எடுத்த முடிவை தமக்கு முற்றிலும் விரோதமான நடவடிக்கை என்று ரஷ்யா வர்ணித்திருக்கிறது. அதிபர் புட்டினைக் கைதுசெய்ய பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் ஒரு பிடிவிறாந்தைப் பிறப்பிருந்தது இங்கு நினைவுகூரத்தக்கது.

நன்றி: பிபிசி

## நீதி செத்த நாடு ... தொடர்ச்சி ...

ஏற்படும். ஆனால் சிறீலங்காவின் நிலைமையோ சுயாதீனமாக இங்கும் நீதிபதிகளை நீதித்துறையின் தலைமையே அச்சுறுத்தி அரசுக்கு வேண்டியதைச் செய்விக்கும் நிலையில் நீதி செத்துக்கிடக்கிறது.

அதேபோல பௌத்த பிக்குகளும், அவர்களின் கைப்பொம்மைகளாக செயற்படும் சரத் வீரசேகர போன்ற சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவதாயும் இலங்கையின் நீதித்துறை மாற்றப்பட்டுள்ளது. அவர்களை மீறி எந்த நீதியையும் வழங்க முடியாத நிலைக்கு நீதிமன்றங்கள் வந்துவிட்டன. அவர்களுக்கு அடிபணியாது சரியாகக் கடமையாற்றும் நீதிபதிகளை இடம்மாற்றுவது, பதவி இறக்குவது, அழுத்தங்களைப் பிரயோகித்து பதவி துறக்கவைப்பது எனப் பல்வேறு சதித்திட்டங்களை மேற்கொள்ளும் நிலைக்கு இந்நாட்டு நீதித்துறை மாற்றப்பட்டிருக்கிறது.

மிக அண்மை வருடங்களாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்துவிட்டு வெளியே வருபவர்களை நீதிமன்ற வாசலில் வைத்தே சுட்டுக்கொள்ளும் அச்சுறுத்தல் பாரம்பரியம் ஒன்று உருவாகி வருகின்றது. இதனால் அநீதிகளுக்கு எதிராக சாட்சி சொல்பவர்களை கொன்றொழிக்கும் நன்கு பயிற்றப்பட்ட துப்பாக்கிதாரிகள் நாடு முழுவதும் இயங்கிவருகின்றனர். இராணுவமயமாக்கலை சாதரணமாக்குவதை திரைமறைவில் நின்று ஊக்குவிக்கும் செயற்பாடுகளின் உச்சம்தான் இந்நிலை. இந்த ஆண்டில் இதுவரையான காலப் பகுதியில் இனந்தெரியாத துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் மட்டும் 44 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் பார்த்திருக்க, சிசிரிவி கெமராக்கள் கவனித்துக்கொண்டிருக்க ஏ.கே.47 ஆயுதங்களோடு மோட்டார் சைக்கிளில் வரும் துப்பாக்கிதாரிகள் அப்பாவி மக்களை சுட்டுக்கொன்றுவிட்டு சுதந்திரமாக தப்பிச்செல்லும் காட்சிகள் நாளாந்தம் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இதனையெல்லாம் அவதானித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான், எடுத்த முடிவும், நாட்டைவிட்டு அவர் வெளியேறியமையும் மிகவும் சரியானது. உண்மையைப் பேசிவிட்டு இந்நாட்டில் உயிர்வாழ முடியாது என்பதற்கு மிகச் சரியான உதாரணமாக அவரது வெளியேற்றம் அமைந்திருக்கின்றது. சிறிலங்காவின் நீதித்துறைக்கு அவமானத்தை மாத்திரமல்லாது, இந்நாட்டு நீதிமன்றங்களும், நீதிபதிகளும் எவ்வாறான அழுத்தங்களுக்கெல்லாம் அடிபணிந்து நீதிக் கடமைசெய்ய வேண்டியுள்ளது என்பதையும் உலகிற்கு அம்பலப்படுத்தியுள்ளது.

• • •

## இளையோரே சிகரம் நீங்கள்

# மனித நேயமே மகத்தான சக்தி

மனித நேயமே மகத்தான மாற்றங்களைப் பூமியில் மலரச் செய்யும் மாண்புடையது. எதிரிகளுக்கும் பரிவு காட்டுவதும், மன்னிப்பை மகுடமாகக் கொண்டு செயலாற்றத் தூண்டுவதும் இந்த மனித நேயம் தான். மனித நேயம் பூமியில் முற்றிலுமாகத் தொலைந்தால் பூமி அழிந்து விடும்.

அருகி வரும் மனித நேயம் இன்னும் இந்தப் பூமிப் பந்தில் பிரவாகம் எடுத்துக் கொண்டிருப்பதால் தான் இன்னும் இந்தப் பூமி அழியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறது. “உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுமடி” என்கிற சிந்தனையில் சிறகசைக்கின்றன மனித நேயச் சிட்டுகள்.

பறவையை வீழ்த்தி, தன்னை வீரன் என்று மெய்ப்பித்துவிடுகிறான் அர்ஜூனன். கர்ணனின் கரத்தில் அம்பு கொடுக்கப்படுகிறது. பறவையைப் பார்த்துவிட்டு, அதனைப் பத்திரமாகக் கீழே வைத்துவிடுகிறார்.



“என்ன கர்ணா, உன் வீரத்தை மெய்ப்பிக்கும் தருணத்தை மறந்து அம்பைக் கீழே வைத்துவிட்டாய்” என்று குரு கேட்கிறார்.

அதற்குக் கர்ணன், காலை வேளையில் பறவைகள் தங்கள் குஞ்சுகளுக்கு உணவளிப்பதற்காகப் பறந்துசெல்கின்றன. அவற்றை நான் கொன்றுவிட்டால், அப்பாவிக் குஞ்சுப்பறவைகள் அநியாயமாக அபலைகளாகிவிடும். என் வீரத்தை மெய்ப்பிப்பதை விட அவற்றைக் காப்பதே கருணை என்று நினைக்கிறேன்” என்று பதிலளிக்கிறார்.



அவரது இரக்கக் குணத்தைக் கண்டு குரு மகிழ்ச்சியடைகிறார். இது தான் மனித நேயத்தின் மகத்தான சக்தியாக இருக்கிறது. ஆத்மாவின் உணர்வு, சிந்தனைகள் மனித நேயச் சிந்தனைகளால் வடிவமைக்கப்படும் போது, அவை உன்னதமான, உயிரோட்டமுள்ள உணர்வுப் பிரளயத்தை உருவாக்குகின்றன. அவை மனித இதயங்களில் ஜோதியாய் அணையாமல் பிரகாசிக்கிறது.

இந்த மனிதநேயம் தொலைந்து கொண்டிருப்பதால் தான் எங்கும் போர் மேகங்களும், போராட்டச் சூறாவளிகளும் சுழன்றடித்துக்கொண்டிருக்கின்றன. அரவணைக்கின்ற மனிதநேயக் கரங்களில் ஆயுதக் குவியல்கள் நிரம்பி வழிந்து, தனது உறவுகளை அழித்துக்கொண்டு, அழிந்துகொண்டிருக்கின்றன.

புழுவுக்கும் உணர்ச்சி உண்டு. புல், பூண்டுக்கும் உணர்ச்சி உண்டு என்பதை ஏனோ நாம் அறியத் தவறிவிட்டோம். அதனால் தான் இயற்கையின் சுழற்சியையும் இதமாக மாற்றியமைப்பதாக எண்ணிக்கொண்டு, இடம் மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

நமது கற்பனைகளும், கதைகளும் கூட இன்று மனித நேயத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றன. நாம் அனைவரும் உறங்கிக்கொண்டு இருக்கி

**கவிதா ஆல்பர்ட்**

றோமா அல்லது கண்விழித்துக் கண் முன் நடப்பதைப் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோமா? என்கிற கேள்விக்குப் ‘பதில் தெரியாது’ என்பது தான் பலரது பதிலாக இருக்கிறது. பதில் தெரிந்திருந்தால் மனித நேயத்தின் குரல் ஓங்கி ஒலித்திருக்கும். அப்போது உலகில் சண்டை சச்சரவுகளும், போட்டியும் பொறாமையும் ஒழிந்து, அமைதி தோன்றியிருக்கும். அகதிகள் இல்லாத உலகம் சாத்தியமாயிருக்கும்.



உலகில் நடக்கும் அனைத்தும் சரித்திரப் பிழையா அல்லது சரித்திரத்தை உருவாக்குபவர்களை நாம் தேர்ந்தெடுக்கத் தவறிய நமது சிந்தனையின் தேக்க நிலையா? அழித்துக் கொண்டிருக்கிறோம், அழிந்து கொண்டிருக்கிறோம் என்பது தான் எதார்த்த உண்மை.

மனித நேயத்தின் மகத்தான சக்தியாக வலம் வந்தவர் அன்னை திரேசா, வின்சென்ட் தே பவுல், மகாத்மா காந்தி, ஐயா ஜடேகர், பென்னி குயிக் போன்றோராவர். மனிதநேயத்தைத் தொலைத்ததால் அபலையான பெண்ணின் கதையை சிலப்பதிகாரம் கூறுகிறது.



நமது முன்னோர்களிடம் மனித நேயம் மிகுந்து இருந்த காரணத்தால் தான் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை சாத்தியமானது. அதனால் தான், அப்போது சாதி, சமய சண்டைகளற்ற ஒருமைப்பாட்டுச் சமூகத்தை நாம் காண முடிந்தது. நமது சித்தர்களும், ஞானிகளும் மக்களுக்கு அறத்தையும், மனித நேயத்தையும் பயிற்றுவித்து, மக்களைப் பண்படுத்தினர். அதனால் தான் பூமியில் மாசறம் தழைத்தோங்கியது.

வன்மமும், வஞ்சகமும், சூதும், வாதும் சிறகு விரிக்க ஆரம்பித்த காரணத்தால், மனித நேயம் நெருக்குதலுக்கும், தாக்குதலுக்கும் உள்ளாக்கப்பட்டு, மனித குலத்தைக் காப்பாற்றும் சக்தியை அது இழந்து நிற்கிறது. மனித நேயம் தோற்றுப்போனால் மானுட வாழ்வில் அனைத்துமே செயலிழந்துவிடும் என்கிற உண்மையை நாம் உணரவேண்டும்.



அதிலும் மனித நேயச் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுக்க வேண்டிய நமது இளைய தலைமுறையினரின் நிலை மிகவும் பரிதாபமானது. அவர்கள் மன நிலங்களில் விதைக்கப்படும் சாதி, மதம், இனம் மற்றும் அழிப்பு, ஆயுதம் என்கிற எண்ணங்கள் இளையோரால் தான் வெளிநடப்பு செய்யப்பட வேண்டியவைகளாக உள்ளன.

மேற்கண்ட மாசுபடர்ந்த சூழ்நிலைகளை மாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் இளையோர்களாகிய உங்கள் கரங்களில் ஒப்படைக்கப்படுகிறது. இன்று உலகம் பல காரணங்களுக்காக மக்களைப் பலிகொடுத்து வரும் சூழலில், இளையோர்களின் இழப்பு என்பது இதயங்களை ரணமாக்கும் கொடிய நிகழ்வுகள்.



இந்நிலையை மாற்ற இளையோர்களாகிய உங்களால் தான் முடியும். மாற்றம் என்பது மனித நேய எண்ணங்களில் விதைக்கப்பட வேண்டும். அப்போது தான் அமைதி என்னும் கனிகளை நாம் அறுவடை செய்ய முடியும். எனவே இளையோர்களாகிய நீங்கள் மண்ணில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளாகப் பரவியிருக்கும் அத்தனை தீமைகளையும் பக்குவமாக அகற்றி, மனித நேயத்தின் மகத்தான சக்தியை உணர்ந்து, அதனைப் பூமியில் மலரவையுங்கள்.

• • •